பக்கங்கள்: பதினாறு

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஆவணி 20 சனிக்கிழமை (05.09.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 283

## போர் வேளையில் நடத்தப்பட்ட

# சட்டத்துக்கு முரணான கொலைகள் குறித்து

# பான் கீ-மூன் சமரசிங்காவிடம் பிரஸ்தாபம்



### அகதிகளின் நெருக்கடிகளை நீக்கவும் வலியுறுத்து

ஜெனிவா, செப்ரெம்பர் 5

இலங்கையில் நடைபெற்ற போரின் போது, சட்டத்துக்கு முரணான படு கொலைகள் நடத்தப்பட்டதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து அரசாங்கம் வகைகூற வேண்டியது அவசியம். அதேபோன்று இவ் விடயத்தில் ஒளிவுமறைவு இல்லாமல் அரசு, வெளிப்படையாக இருக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ - மூன் இவ்வாறு இலங் கையின் மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சருடன் இங்கு நடத்திய சந்திப்பில் எடுத்துரைத்தார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)



## வடக்கில் கண்ணிகளை அகற்ற ஐந்து விசேட இயந்திரங்கள்

கொழும்பு, செப். 05

வடபகுதியில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ஐந்து விசேட இயந்திரங்கள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் ஜப்பானிய நிபுணர்களின் உதவியுடன் கட்டிய நீர்மூழ்கிக் கப்பல் முள்ளிவாய்க்காலில் கண்டுபிடிக்கப்பட்டதாம்

### ஆங்கில நாளேடு செய்தி

கொழும்பு, செப்.5

நீர்மூழ்கிக் கப்பல்களையும் அவற்றைப் பயன்படுத்துவதற்கென்று சுரங்கப்பாதை ஒன்றையும் விடுதலைப் புலிகள் கட்டினர் என்றும் அதற்கு ஜப்பானியநிபுணர்குழுஒன்று அவர்களுக்கு உதவியதாகவும் சொல்லப்படுகிறது.

கொழும்பில் இருந்து வெளிவரும் 'த ஐலண்ட்' ஆங்கில நாளேடு இது தொடர்பான செய்தி ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விவரங்கள் சில வருமாறு:-

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த முக்கிய பகுதியான புதுக்குடியிருப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்றம் குறித்து சுயாதீன விசாரணை நடத்துவதென்ற வாக்குறுதியை அரசு நிறைவேற்றவில்லை

### ஐ.நா.அதிகாரி ஜோன் ஹோம்ஸ் குற்றச்சாட்டு



ஒஸ்லோ, செப்.5

இலங்கையில் போரின் இறுதிக் காலத்தில் நடைபெற்ற யுத்த மோதல் குற்றங்கள் குறித்து சுயாதீன விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என ஐ.நாவுக்கு அளித்த வாக்குறுதியை அரசு நிறைவேற்றாதமை குறித்து ஐ.நாவின் மனிதாபிமான விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் நாயகம் ஜோன் ஹோம்ஸ் ஏமாற்றம் வெளியிட்டுள்ளார்.

நோர்வேக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜோன் ஹோம்ஸ் அந்த நாட்டின் 'ஆப்டென் போஸ்டெல்' என்ற செய்தித்தாளுக்கு 'சனல்-4' வீடியோ குறித்துக்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகள் முட்கம்பிகளால் அடைத்து வைக்கப்பட்டிருக்க 10, 000 பேர் எப்படிக் காணாமற் போகமுடியும்?

### பொறுப்புடன் அரசு பதிலளிக்கக் கேட்கிறது ஐ.தே.க.



கொழும்பு, செப். 05

அகதிமுகாம்களில் இருந்து காணாமல்போயுள்ளனர் என்று கூறப்படும் 10 ஆயிரம் தமிழர்களுக்கு என்ன நடந்தது? அவர்கள் எங்கே இருக்கிறார்கள். தமிழ் அகதிகள் சிறைக் கைதிகள் போன்று முட்கம்பிகள் சூழ அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு இருக்க 10,000 பேர் எவ்வாறு காணாமற் போனார்கள்? அரசு இது தொடர்பில் பொறுப்புடன் பதிலளிக்க வேண்டும்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை; நிறுத்த ஐரோப்பிய ஒன்றியம் முடிவு?

கொழும்பு, செப். 05

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை இலங்கைக்கு இம்முறை கிடைக்காது என ஐரோப்பிய ஒன்றியத்தின் இரகசிய அறிக்கையை மையமாக வைத்து உலகின் முன்னணி சஞ்சிகைகளில் ஒன்றான 'த எகனமிஸ்ட்' தெரிவித்துள்ளது.

சர்வதேச அளவில் தனது நற்பெயருக்கு மிக வேகமாக களங்கத்தை ஏற்படுத்திக் கொண்ட நாடு இலங்கையை போல வேறு எதுவும் இருக்கமுடியாது என்றும் 'த எகனமிஸ்ட்' குறிப்பிட்டுள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் இராணுவ நினைவுத் தூபிகளின் திறப்பு விழாக்கள் ஒத்திவைப்பு

கொழும்பு, செப். 05

புலிகளுடனான யுத்தத்தின்போது வட மாகாணத்தில் உயிரிழந்த படையினரின் நினைவாக அங்கு கட்டப்பட்டிருக்கும் நினைவுத் தூபிகளின் திறப்பு விழாக்கள் மறு

(16 ஆம் பக்கம் பார்க்க)

Cosy Hotel & Restaurant



தம் புரியாணி, நூடில்ஸ், (f)பிறைட்ரைஸ், ஸ்பெஷல் நாண், பூரி, சூப் மற்றும் சைனிஸ், இந்தியன் ஸ்பெஷல் உணவு, கறி வகைகள்

Open 11.00 am to 11.00 pm

இல: 25, புகையிரத நிலைய வீதி, வெள்ளவத்தை. CALL: 0112504020

இல:15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம். CALL: 021-2225899

கோசி உணவகம் Feel at home

யாழ் நகரிலும் கொழும்பிலும் நீண்ட காலமாக சுவையான, தரமான Indian, Chinees உணவு வகைகளுடன்

AC Non AC Rooms Available

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# டெமென்டீவா, ஜான்கோவிச் தோல்வி சபீனா–ஷரபோவா முன்னேற்றம்

அமெரிக்க ஓபன் கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் மகளிர் பிரிவு ஒற்றியர் இரண்டாம் சுற்று ஆட்டங்களில் ரஷ்ய வீராங்கனையான எலினா டெமென்டீவா, செர்பிய வீராங்கனையான ஜெலீனா ஜான்கோவிச் ஆகியோர் தங்களது ஆட்டங்களில் அதிர்ச்சித் தோல்வி கண்டு வெளியேறினர். தினாரா சபீனாவும் தோல்வியி லிருந்து தப்பினார். அதேவேளை மரியா ஷரபோவா இலகுவான வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு நுழைந்தார்.

தர நிலை வழங்கப்படாத அமெரிக்க வீராங்கனை மெலானி ஊடின் என்ற இளம் வீராங்கனை 4ஆம் தரவரிசையில் உள்ள ரஷ்ய வீராங்கனையான டெமென்டீவாவை 5- 7, 6- 4, 6- 3 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றார்.

5ஆம் தரவரிசையில் உள்ள செர்பிய நட்சத்திரம் ஜெலீனா ஜான்கோவிச், தர நிலையில் இல்லாத கஸகஸ் தான் நாட்டு வீராங்கனையான யாரஸ்லோவா ஷ்வெடோவாவிடம் 3-6, 7-6, 6-7 என்ற செற் கணக்கில் போராடித் தோல்வி தழுவினார்.

முதலாம் தர நிலையில் உள்ள தினாரா சபீனா, நேற்றும் தோல்வியிலிருந்து தப்பும் விதமான ஆட்டத்தை விளையாடினார். தர நிலையில் இல்லாத ஜேர்மன் வீராங்கனை யான பர்ராய்ஸை 6-7, 6-2, 6-3 என்ற செற்கணக்கில் வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

மரியா ஷரபோவா, அமெரிக்காவின் மெக்காலே என்பவரை 6- 2, 6- 1 என்ற செற் கணக் கில் வீழ்த்தி 3ஆவது சுற் றுக்கு முன்னேறினார்.

6ஆம் தரவரிசையில் உள்ள ரஷ்ய வீராங்கனையான குஸ்னெட் சோவா, லாட்வியாவின் செவஸ்டோவா என்பவரை 6-4, 6-2 என்ற செற் கணக்கில் வீழ்த்தி 3ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

# டிராவிட்டின் தன்னம்பிக்கை!

இரண்டு ஆண்டுகள் போராட்டத்துக்குப் பின் மீண்டும் ஒரு நாள் போட்டிகளுக்கான இந்திய அணியில் இடம் பிடித்துள்ளார் ராகுல் டிராவிட். அணியிலிருந்து அவ்வப்போது புறக்கணிக் கப்பட்ட போதும், அயராத தன்னம்பிக்கை காரணமாக மீண்டும் வாய்ப்புப் பெற்றுள்ளார்.

இந்திய அணியின் 'பெருஞ்சுவர்' என வர்ணிக்கப்படும் டிராவிட், தனது பொறுப்பான ஆட்டத்தால் அணியை சரிவி லிருந்து மீட்கும் வல்லமை படைத்தவர்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன் வரை, மும்மூர்த்திகள் என அழைக்கப்படும் சச்சின், கங்குலி, டிராவிட் இல்லாமல், இந்திய அணி எந்த ஒரு நாள் தொடர்களிலும் பங்கேற்றது இல்லை. இதில், சச்சின் மட்டுமே அணியிலிருந்து இது வரை, தெரிவாளர் களால் நீக்கப்பட்டது இல்லை. கங்குலி, டிராவிட் இருவரும் அவ் வப்போது திறமையை வெளிக்காட்டத் தவறியமையால் அணி யிலிருந்து பலமுறை நீக்கப்பட்டுள்ளனர். இப்போது கங்குலி ஓய்வு பெற்றுவிட்டார்.

தற்போது ராகுல் டிராவிட் தன்னம்பிக்கையுடன் அணிக்குத் திரும்பியுள்ளார். கடந்த 2007ஆம் ஆண்டு மோசமாக விளை யாடிக் கொண்டிருந்தார் எனக் காரணம் காட்டியே ஒரு நாள் போட் டிக ளுக்கான இந்திய அணியிலிருந்து அதிரடி யாக நீக்கப்பட்டார் டிராவிட்.



அந்த ஆண்டு 31 போட்டிகளில் விளை யாடியிருந்த இவரது சராசரி 37.4 சதவீதம். இதை மோசமான செயற்பாடு என்று கூற முடியாது. இருப்பினும் டிராவிட், அணி நிர்வாகத்தால் ஓரங் கட்டப்பட்டார். இது வரை 333 ஒரு நாள் போட்டிகளில் விளை யாடி 10,585 ஓட்டங்களைக் குவித்துள் ளார் டிராவிட். சராசரி 39.49 சதவீதம்.

ரோகித் சர்மா, விராத் கோஹ்லி உள் ளிட்ட இளம் வீரர்களின் எழுச்சியே, டிராவிட்டின் நீக்கத்துக்கு முக்கிய கார ணமாக அமைந்தது. ஆனாலும், 2ஆவது 'ருவென்ரி-20' உலகக் கிண்ணத்தின் போது படுதோல்வி இந்திய அணிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது. டிராவிட் போன்ற அனுபவவீரரின் அவசியத்தை உணர்த்தியது. ரோகித் சர்மாவின் செயற் பாடும் எதிர்பார்த்த அளவுக்கு அமைய வில்லை. 41 ஒருநாள் போட்டிகளில் விளை யாடியுள்ள ரோகித்தின் சராசரி வெறும் 24.8 சதவீதம் தான்.

இந்நிலையில் நடுவரிசையை பலப் படுத்த வேண்டிய கட்டாயம் இந்திய அணிக்கு ஏற்பட்டது. அடுத்து நடக்க வுள்ள 'சம்பியன்ஸ் கிண்ணம்' உள்ளிட்ட முக்கிய தொடர்களைக் கணக்கில் கொண்டு, சரியான நேரத்தில் டிராவிட்டுக்கு மீண் டும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. 2 ஆண்டு கள் அணியில் இடம்பெறாவிட்டாலும், டிராவிட் ஒரு நாள் போட்டிகளிலிருந்து தனது ஓய்வை அறி விக்கவில்லை.

மீண்டும் ஒரு நாள்அணியில்இடம் பெற முடியும் என்ற தன்னம்பிக்கை யுடன் இருந்தார். தற்போது அவரது தன்னம்பிக்கை வெற்றி தேடிக் கொடுத்துள்ளது.

இலங்கை முத் தரப்புதொடரில் தனது அனுபவ ஆட் டத்தை வெளிப் படுத்தும் பட்சத் தில், அடுத்த உல கக்கிண்ணத் தொடர் (2011) வரை இந்திய அணியில் டிராவிட் நீடிக்க லாம் என எதிர் பார்க் கப்படுகிறது.

## ANNOUNCEMENT STAFF MEETING OF UDUVIL GIRLS' COLLEGE

All members of the staff of Uduvil Girls' College are hereby informed that the third term commencement staff meeting will be held as informed by the Principal on Sunday, September 06, 2009. The Programme is as follows:

3.30 p.m. Holy Communion Service at the School Chapel

4.00 p.m. Staff Meeting & Fellowship Tea

All members of the staff are informed to be present without fail.

Manager,
Uduvil Girls' College.

## மரண அறிவித்தல்

### சின்னையா தெய்வேந்திரன்

பிலியத்தலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தெய்வேந்திரன் 25.08.2009 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா மற்றும் எலிசபத் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற் றும் விஜயகுமாரி தம்பதியினரின் பாசமிகு மருமகனும் சறோர் ஜினியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2009) சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு களணி புற மலர்ச்சாலை, மரு தான வீதி, பொறளையில் இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி மேற்கு,*
*வட்டுக்கோட்டை.*

தகவல்:
தெ.சறோஜினி (மனைவி).
T.P.: 0771907452

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி மார்க்கண்டு



யாழ்ப்பாணம், 77, பாரதி வீதி, சுண்டிக்குளியைச் சேர்ந்தவரும் நோர்வேயை வசிப்பிடமாக கொண்டவருமான சின்னத்தம்பி மார்க் கண்டு 02.09.09 அன்று நோர்வே யில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின் னத்தம்பி - சின்னம்மா தம்பதியி னரின் அன்பு மகனும் காலஞ் சென்ற சரவணமுத்து - இளை யாச்சி தம்பதியினரின் அன்பு மரு மகனும் காலஞ்சென்ற சிவமணியின் அன்புக்கணவரும், பாலச்சந்திரன் (Norway), தேவச்சந்திரன்(டென்மார்க்), இரவிச்சந்திரன் (பிரான்ஸ்), பிரேமச்சந்திரன்(கனடா), மணிமேகலை (கனடா), கேமச்சந்திரன்(Norway) ஆகி யோரின் அன்புத் தந்தையும் ஜெயலட்சுமி(Norway), புனித மணி (டென்மார்க்), வனஜா (பிரான்ஸ்), சுமதி(கனடா), இராஜகுலசிங்கம் (கனடா), உதயலட்சுமி(Norway) ஆகி யோரின் அன்பு மாமனாரும், ஆதிரையன், இளந்திரையன், ஆதிரை, சாரங்கி, கோகுலன், கௌதமன், துவாரகன், ஜெனகன், ஜீவகன், யாதவன், யாழினி, மிதுலன், சாமந்தி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.09.2009 புதன்கிழமை காலை 09.30 மணிமுதல் 11.00 மணிவரை Ostre Gravlund, Tveten veien 7 Helsfyr, Norway என்ற முகவரியில் கிரியைகள் செய்யப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறோம்.

*யாழ்ப்பாணம்*
*தொ.பே.இல-0212227861*

தகவல்:
துரைரத்தினம்.

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் டேவிற் அலெக்ஸ்சான்டர்

(உரிமையாளர் லொயலாஸ்)

*"சீவியத்தில் என்னை நேசித்தவர்கள் மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"*

வைற் ஹவுஸ் அந்தியகால சேவை நிறுவனம் உதயமாவதற்கு அஸ்திபாரமாகவும், உறுதுணையாகவும் இருந்து உழைத்த அன்பின் நண்பன் அமரர் டேவிற் அலெக்ஸ்சான்டர் அவர்களின் திடீர் மறைவையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்தோடு ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*180, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(88533)

வைற் ஹவுஸ் அந்திய கால சேவை.
உரிமையாளர் குடும்பமும், சக ஊழியர்களும்.


S&M Consultant Service, Branch Office
148, Temple Road, Jaffna. (யுனிசெவ் முன்பாக)

யாழ்.மாணவர்களுக்கு லண்டனில் Student Visa பெற்றுக்கொடுப்பதில் முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்!!!

தற்பொழுது தளர்த்தப்பட்டுள்ள சலுகைகளைப் பயன்படுத்தி ஒக்ரோபர் கற்கை நெறிகளுக்கு முந்துங்கள்

விண்ணப்பித்த மாணவர்களது எந்தவொரு விண்ணப்பமும் நிராகரிக்கப்படவில்லை என்பதை மிக்க மகிழ்சியுடன் அறியத்தருகின்றோம்.

அண்மையில் விசா கிடைக்கப்பெற்று லண்டன் செல்வதற்கு தயாராக இருக்கும் மாணவர்கள் சிலரின் பெயர் விபரங்கள்:-

I. செல்வி அல்பிரெட் யோகராஜா யாழினி - இல 02, இராசாவின் தோட்டம் லேன், யாழ்ப்பாணம்.
II. செல்வன் இராஜதுரை உதயராஜ் - 13/2,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
III. செல்வி ராதா கணபதிப்பிள்ளை - 'தங்கமணி வாசா', கரவெட்டி மத்தி.
IV. திருமதி. வசந்தன் சர்மிளா - ஞானசம்பந்தர் வீதி, உரும்பிராய்.
V. செல்வன் கருணானந்தன் றஜீவ்கரன் - 'சிவபதி' மணியபுலம் லேன், தாவடி வடக்கு, கொக்குவில்.

நீங்களும் இக்குழுவுடன் இணைந்து லண்டன் சென்று உங்கள் எதிர்காலக் கல்வியை வளமாக்கிக் கொள்ளுங்கள்.

விண்ணப்பங்களுக்கு முந்துங்கள்.

உடன் தொடர்பு: 0774528818
TEL - 021 222 3818
E.Mail : mg 1404 _ 2009@yahoo.com
148, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (யுனிசெவ் முன்பாக).
(சி/560743)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சர்வதேசத்தில் புதிய நட்புறவுத் தளத்தை கட்டி எழுப்ப முயலும் கொழும்பு அரசு

'அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை;நிரந்தர எதிரிகளும் இல்லை.' என்பார்கள். நேற்று அடித்துக் கொண்டவர்கள் இன்று ஆரத்தழுவிக் கொள்வார்கள். நேற்று ஒரு தட்டில் சாப்பிட்டவர்கள் இன்று அடித்துக் கொள்வார்கள். இது உள்நாட்டு - தேசிய - அரசியலில் சகஜம்.

ஆனால், சர்வதேச இராஜதந்திர உறவு நிலை விடயத்தில் இது வழமை அல்ல. அங்கு உறவுகளும்; எதிர்வு நிலைகளும் திடீரென முளைத்து விடுவதில்லை. நீண்டகால இயக்கத்தின் விளைவாக - சர்வதேச உறவாடல் போக்கின் பேறாக - உறவு நிலைகளும், அணி சேரல்களும், அணி மாறல்களும் அங்கு நிகழுகின்றன.

அதுவும் சர்வதேச வல்லாதிக்கப் போட்டியில் உலக நாடுகள் சிக்குண்டிருக்கையில், நமது இலங்கைத் தீவு போன்ற சுயபலமற்ற நாட்டின் நிலைமை மிகவும் சிக்கலுக்குரியது. சர்வதேச இராஜதந்திரத் தொடர்பாடல்களைப் பேணுவதிலும் உறவு நிலையை விஸ்தரிப்பதிலும் இலங்கை போன்ற ஒரு நாடு ஒவ்வொரு அடியையும் பார்த்துப் பார்த்து - மிக நிதானமாக - எடுத்து வைக்கவேண்டியது மிகவும் முக்கியமானதாகும்.

உள்ளூரில் கிட்டும் வெற்றிக் கொண்டாட்டங்கள், ஆதரவு மற்றும் செல்வாக்குகளைச் சாதகமாக வைத்துக் கொண்டு அதன் மூலம் சர்வதேச அரசியல் காய்நகர்த்தல்களை வெற்றி கரமாக முன்னெடுக்கலாம் எனக் கருதுவது சுத்த அபத்த மேயன்றி வேறில்லை. அதைத்தான் இலங்கை நிர்வாகம் தெரிந்தும், தெரியாமலும் செய்து கொண்டிருக்கின்றதோ என்ற எண்ணம் பல தரப்பினருக்கும் இப்போது எழுந்திருக்கின்றது.

இதைத்தான் சர்வதேச ஊடகம் ஒன்று ''கடந்த சில மாதங்களாக உள்நாட்டில் யுத்தம் ஒன்றை வெற்றிகொண்ட மஹிந்த ராஜபக்ஷ நிர்வாகம், மறுபக்கத்தில் சர்வதேச ரீதியில் பல நட்பு சக்திகளை (நாடுகளை) இழந்து கொண்டிருக்கின்றது'' - என்று சுட்டிக்காட்டியிருக்கின்றது.

பாரம்பரியமாக இதுவரை இலங்கையோடு நட்புப் பாராட்டி பல்வேறு வழிகளிலும் இலங்கைக்கு உதவி வந்த மேற்கு நாடுகள் இப்போது இலங்கை அரசின் போக்கால் அதிருப்தியுற்றுத் தள்ளி நிற்க, புதிய நட்பு நாடுகளை வளைத்துப் போட முனைகின்றது இலங்கை அரச நிர்வாகம்.

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்கு நாடுகள் இலங்கையிலிருந்து தூர விலகிப்போக அத்தரப்பினருக்கு சகிக்கப்பிடிக்காத நாடுகளின் பக்கம் நட்புக் கரம் நீட்டுகின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்பது வெளிப்படையானது.

சீனா, லிபியா, பாகிஸ்தான், ஈரான் போன்ற நாடுகளுடன் அணி சேருகின்றார் இலங்கை அதிபர்.

போதாக்குறைக்கு சர்வதேச ரீதியில் அமெரிக்காவுக்கு எதிரான கருத்து நிலைப்பாட்டை உருவாக்குவதில் தீவிரமானவராக விளங்கும் வெனிசூலா அதிபரைத் தேடிப் போய்ச் சந்தித்துக் கைலாகு கொடுத்துப் படம் எடுத்துத் தங்களது உறவுநிலையைப் பகிரங்கப்படுத்துகின்றார் அவர்.

'எக்னாமிஸ்ட்' இணையத்தளப் பதிப்பு குறிப்பிடுகின்றமைபோல, மேற்குலகுக்கு மாற்றான புதிய சர்வதேச நண்பர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேடிக் கொண்டாலும், அவரது அரசியல் நிலைப்பாட்டை சர்வதேச ரீதியில் ஸ்திரப்படுத்திக் கொள்ளவோ அல்லது நாட்டின் பொருளாதார நெருக்கடிகளை முகம் கொடுத்துச் சமாளிக்கவோ அந்த உறவுநிலை எவ்வளவு தூரத்துக்கு உதவ முடியும் என்பது கேள்விக்குறியே.

அதேசமயம், மேற்குலகை - குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஏனைய ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை - புறந்தள்ளி, உதாசீனப்படுத்தி, எரிச்சலூட்டி, சினக்கவைக்கும் விதத்தில் கையாளும் கொழும்பின் போக்கின் விளைவுகள் என்னாகும் - எத்தகைய விபரீதங்களை ஏற்படுத்தும் - என்பதும் இப்போதைக்கு ஆரூடம் கூறத்தக்க விடயங்கள் அல்ல.

பரவலான பொலிஸ் சித்திரவதைகள் பற்றிய தகவல்கள், ஊடகங்கள் - ஊடகவியலாளர்களுக்கு எதிரான இம்சைகள், அரசியலாக்கப்படும் நீதிமன்ற முறைமை, யுத்தத்தின் போதும், முன்னரும், பின்னரும் ஆள்கள் பெரும் எண்ணிக்கையில் காணாமற் போனமை தொடர்பாக நீதி, நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்படாமை, இத்தகைய வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டோர் சட்டத்தின் பிடியிலிருந்து இலகுவாகத் தப்பிச் செல்லக் கூடியதான சட்ட விலக்களிப்புகளை வழங்கியமை, பல லட்சக் கணக்கான தமிழர்களை நியாயமற்ற முறையில் தடுத்து வைத்திருக்கின்றமை போன்றவை உட்பட்ட பல்வேறு மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கைக்கு எதிராக சர்வதேச ரீதியில் குற்றச்சாட்டுகளும் எதிர்ப்புக் குரலும் வலிமையாக எழுந்து வரும் வேளை இது.

இவை தொடர்பான கண்டனக் கணைகளை சர்வதேச ரீதியில் எதிர்கொள்ளும் சமயத்தில்தான், பாரம்பரிய நட்பு நாடுகளுடனான நல்லுறவைத் துறந்து புதிய நட்புகளை அரவணைக்கும் புதிய இராஜதந்திரம் ஒன்றில் கொழும்பு கால்பதித்திருப்பதாகப் பல தரப்பினராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்குலகை புறம் ஒதுக்கிப் போடும் செயற்போக்கு, உடனடி பின்விளைவுகளைத் தராமற் போகக்கூடும், அல்லது அதன் தாக்கம் வெறும் 'ஜி.எஸ்.பி. பிளஸ்'ஏற்றுமதி வரிச்சலுகையை வெட்டுதல் போன்ற பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுடன் அடங்கிப் போகக்கூடும் - என்று கொழும்பு இப்போதைக்கு நம்பலாம்.

ஆனால் அதற்கு அப்பாலும் அது மோசமாக விரிவடையக் கூடிய - விஸ்தரிக்கப்படக்கூடிய - ஆபத்தும் உள்ளது என்பதை சம்பந்தப்பட்டோர் உய்த்தறிந்து கொள்வது நல்லது.

ஒரு தனி நாட்டின் இறைமை என்ற பாதுகாப்பு வேலி, இத்தகைய செயற்போக்கை எவ்வளவு தூரம் காப்பாற்றி, காபந்து பண்ணும் என்பதை இப்போதே அறுதியிட்டுக் கூறிவிடமுடியாது. போகப் போகத்தான் விளைவுகள் தெரிய வரும். சிலசமயம் அவை விபரீதத்தில் கொண்டுபோயும் விடலாம்.

# இலங்கையில் அமைதியைச் சீர் குலைக்க புலம்பெயர்ந்த தமிழர்கள் முனைப்பு

## அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு,செப்.05

இலங்கையில் நிலைத்திருக்கக் கூடிய அமைதியான கருத்து இணக்கத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கு அரசு முயன்று வருகின்றபோதும் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த ஒரு சிலர் அந்த அமைதி நடவடிக்கைகளைத் தோல்வி அடையச் செய்ய முயற்சிக்கின்றனர் என அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார்.

ஜோர்ஜ் வாஷிங்டன் பல்கலைக் கழகத்தில் உள்ள தாயகப் பாதுகாப்பு காவல் கல்வி நிறுவனத்தில் உரையாற்றிய விக்கிரமசூரிய, விடுதலைப் புலிகளுடனான போரில் அரசை வெற்றியடைய வைத்த முக்கிய கூறுகள் குறித்து விளக்கினார்.

அவற்றில் ஒன்று, பொதுமக்களுக்கு எவ்வித தீங்கும் நிகழாமல் விடுதலைப் புலிகளை அழித்து ஒழிக்குமாறு படையினருக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்திருந்த தெளிவான உத்தரவு,

அத்துடன் விடுதலைப் புலிகளின் தலைவர்களை அரசியல் நடவடிக்கைகளுக்குள் கொண்டு வருவதற்கான முயற்சி மற்றும் வெளி நாடுகளில் புலிகள் நிதி சேகரிப்பதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் மேற்குலக அரசுகளுடன் சேர்ந்து ஈடுபட்டமை,ஆகியனவே வெற்றிபெறக் காரணம் என்று அவர் கூறினார்.

விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட 25 வருடகால இன ரீதியான வெறுப்பு உணர்வுகளை நாம் இப்போது இல்லாது செய்ய வேண்டும். கருத்து வேறுபாடுகளைக் களையவேண்டும் என்பதுடன், அம்மக்களது வாழ்க்கையைக் கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாங்கள் அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டுவருவோம் என்று உறுதியளித்த தூதுவர், கடந்த ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வவுனியாவிலும், யாழ்ப்பாணத்திலும் நடத்தப்பட்ட தேர்தல்கள் மூலம் தமிழ்ப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என்றும் வருங்காலத் தேர்தல்கள் தேசிய அரசியலில் தமிழர்களின் செயற்பாடுகளை அதிகரிக்கும் என்றும் தெரிவித்தார்.

இத்தகைய அரசியல் தீர்வு இலங்கையில், தழிழர்களுக்கென குரலும் முக்கியத்துவமும் பலமும் இருக்கின்றன என்பதை வெளிப்படுத்துகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் போரில் தோல்வி அடைந்து விட்டனர். இப்போது புலம்பெயர் தமிழர்கள் அமைதியைத் தோற்கடிக்க முயற்சிக்கின்றனர். ஆனால், இலங்கையில் உள்ள மக்கள் அமைதியை மட்டுமே விரும்புகின்றனர். அமைதியை நிலைநாட்டுவதற்கான தருணம் இதுதான் என விக்கிரமசூரிய மேலும் கூறினார். (சி)

# கூட்டமைப்பின் ஸ்ரீகாந்தாவுக்கு அமைச்சர் டக்ளஸ் புகழாரம்

கொழும்பு, செப்.5

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான என்.ஸ்ரீகாந்தாவை ஊடகவியலாளர் மத்தியில் புகழ்ந்து பேசினார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

கொழும்பில் தமது அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஸ்ரீகாந்தா எம்.பி. ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த அறிவாளி என்ற தோரணையில் புகழ்ந்து பேசினார்.

தமக்கும் ஸ்ரீகாந்தா எம்.பிக்குமிடை யில் நாடாளுமன்றில் இடம்பெற்ற உரையாடல் ஒன்றை அமைச்சர் நினைவு கூர்ந்தார்.

அந்த உரையாடலின்போது அமைச்சர்களான நிமால் சிறிபால டி சில்வா, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே ஆகியோர் இருந்தனர் என்றும், அந்த உரையாடல் தமிழர்களுக்கான தீர்வுத் திட்டம் பற்றி அமைந்தது என்றும் அமைச்சர் ஊடகவியலாளர்கள் மத்தியில் தெரிவித்தார். (சி)

# குடும்ப நல உத்தியோகத்தருக்கான பயிற்சி நெறிகள் திங்கள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.5

வடமாகாண சுகாதார அமைச்சால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட குடும்பநல உத்தியோகத்தர்களுக்கான அடிப்படைப் பயிற்சிநெறி நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள தாதியர் பயிற்சிக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களை காலை 9மணிக்கு சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மத்திய சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார சேவைகளுக்கான பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியகலாநிதி பி.ஜி.மகிபால கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.ஈ. ஞானசோதி கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக 'நிக்கொட்' நிறுவன பிரதித் திட்டப்பணிப்பாளர் என்.எஸ்.ஆர். சிவரூபன் கலந்து கொள்வார்.

(203-201)

# முகாம் மக்களின் நிலை குறித்து பான் கீ மூன் கவலை

கொழும்பு, செப்.5

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள அகதி மக்களின் நிலைமைகள் தொடர்பில் தான் கவலை கொண்டுள்ளார் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

காலநிலை தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜெனீவா சென்றுள்ள பான் கீ மூன், அந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமுன்னர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

''வவுனியா முகாம்களில் தங்கியுள்ள சுமார் மூன்று லட்சம் அகதிகளின் நிலைமை கவலையளிக்கின்றது. அவர்களுக்கான வசதிகளில் முன்னேற்றம் காணப்படவில்லை. முகாம்களுக்கு வெளியில் செல்வதற்கு அம்மக்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.

அம்மக்கள் அவர்களின் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதியளிக்கப்படவேண்டும்'' - என்றும் கூறினார். (சி)

## வாழ்வகத்தின் நிறுவுநர் நினைவுநாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.5

வாழ்வகத்தின் நிறுவுநர் நினைவு நாள் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9 மணிக்கு சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகத்தில் அமைந்துள்ள வாழ்வகத்தில் இடம்பெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபிணி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட சமூகநலத்துறைத் திட்ட இணைப்பாளர் த.கிருபாகரன், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோர் கலந்துகொள்வர்.

நிகழ்வில் ''விழிப்புலனற்றோரின் வளமான வாழ்வில் கணனியின் பங்கு'' என்னும் தலைப்பில் வட்டுக்கோட்டை யாழ்ப் பாணத் தொழில்நுட்பக் கல்லூரி கணனி அலகுப் பொறுப்பாசிரியர் த. அகிலன் விரிவுரையை நிகழ்த்துவார்.

வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகளும், கு.நக்கீரன் குழுவினரின் புல்லாங்குழல் இசையரங்கு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (203-55)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 21 | 06.09.2009 |
| | ஞாயிற்றுகிழமை |
| திதி: | துதியை |
| | மு.இ. 11.11வரை |
| நட்சத்திரம்: | உத்திரட்டாதி |
| | பி.இ.04.31 வரை |
| சுபநேரம்: | 09.04 - 10.34 |
| ராகுகாலம்: | 04.34 - 06.04 |

# 'சனல் 4' வீடியோக் காட்சி அமெரிக்கா ஆழ்ந்த கவலை

இலங்கை இராணுவத்தினர், இளைஞர்கள் சிலரை நிர்வாணமாக்கிச் சுட்டுக் கொன்றமையைக் காட்டும் 'சனல் - 4' தொலைக்காட்சியின் வீடியோக் காட்சி குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

'சனல் - 4' தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோக் காட்சி எமக்கு ஆழ்ந்த கவலையளிக்கின்றது; மனக் கிலேசம் அளிக்கின்றது. இதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து அமெரிக்கா மேலதிக தகவல்களுக்காகக் காத்திருக்கிறது. - இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் சுஸன் றைஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு இம் மாதம் தலைமைப்பதவி வகிக்கும் சுஸன்றைஸ் பாதுகாப்புச்சபை இது குறித்து ஆராயுமா என்பது தொடர்பாக எதுவும் தெரிவிக்கவில்லை என்றும் 'சனல் - 4' தொலைக்காட்சி வெளியிட்ட வீடியோக் காட்சி தொடர்பான மேலதிக தகவல்கள் கிடைத்தபின்னர் பாதுகாப்புச்சபையில் ஆராயப்படலாம் என்றும் தெரிவித்தார். (சி)

# கைதடி ஆயுள்வேத வைத்தியசாலையில் அக்குபஞ்சர் பயிற்சிநெறி நேற்று ஆரம்பம்

நல்லூர், செப்.5

கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் அக்குபஞ்சர் பயிற்சிநெறி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் தொடர்ந்து இப்பயிற்சிநெறி இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் வைத்திய கலாநிதி [illegible] வானி தலைமையில் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியில் சித்த மருத்துவத்துறையைச் சேர்ந்த 40 வைத்திய அதிகாரிகள் பயிற்சிபெறவுள்ளனர்.

கொரிய மருத்துவத்துறை வைத்திய நிபுணர்கள் ஹண்டே இயங்கங், திருமதி கஜோ இயங்கங் ஆகியோர் இதற்கான பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.

மாகாண ஆயுள்வேத திணைக்களத்தின் அனுசரணையுடன் இடம்பெறும் இந்தப் பயிற்சிநெறிகளில் கொழும்பு ஆயுள்வேத வைத்திய நிபுணரும் பயிற்சி நெறியின் இணைப்பாளர்களுமான பியதாஸ வன்னியாராச்சி, வைத்திய கலாநிதி விஜயலக்சுமி ஞானலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(203-111)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## வெற்றிலைக்கேணி முள்ளியான் மண்டலாய்ப் பிள்ளையார் தேவஸ்தானம்

### வருடாந்த மணவாளக்கோல (108) சங்காபிஷேக விஞ்ஞாபனம்

நிகழும் விரோதி வருடம் ஆவணித்திங்கள் 26ஆம் நாள் நாளை (06.09.2009) ஞாயிற்றுக்கிழமை உத்தரட்டாதி நட்சத்திரம் கூடிய சுப வேளையில் மேற்படி ஆலயத்தின் மூலமூர்த்தியாகிய விநாயகப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கு விஷேட அபிடேக பூஜைவழிபாடுகளும் புலோலி மேற்கு வத்தனைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் என்பதனை மண்டலாய்ப்பிள்ளையார் அடியார்களுக்கு அறியத்தருகின்றேன்.

மங்கள வாத்தியம்:
எம்.எஸ்.விஜயகுமார் குழுவினர், பருத்திநகர்
எஸ்.ஜீவரட்ணம் குழுவினர், நெல்லியடி.

ஆலயப் பிரதமகுரு
சிவஸ்ரீ இ.மண்டலேஸ்வரக்குருக்கள்
புலோலி மேற்கு.
T.P.: 0779791044

### காணியும் வீடும் விற்பனைக்கு

ஆனைக்கோட்டை மானிப்பாய் வீதியில் 5½ பரப்புக் காணியுடன் கூடிய மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771994926 (S.T.தர்சன்), 0041244450315

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



பிறப்பு 08 ★ 10 ★ 1929 — இறப்பு 04 ★ 08 ★ 2009

### அமரர் கந்தையா பாக்கியம்

கடந்த (04.08.2009) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (05.09.2009) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

'திருத்தணிகை',
திருப்புகழ் மண்டப வீதி,
சித்திரவேலாயுதர் கோவிலடி, மீசாலை.
குடும்பத்தினர்.
(88604)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

யாழ் நகரில் முதன்முறையாக, தொழில்சார் கணனிக்கற்கை நெறிகள்
A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கும், கணனி ஆர்வலர்களிற்கும்
புதிய பிரிவுகள் மாபெரும் கட்டணக்கழிவுடன் ஆரம்பமாகின்றன.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
09.09.2009 :- Batch i - 09Am/ Batch ii-03pm
11.09.2009 :- Batch i - 09Am/ Batch ii-03pm
12.09.2009 :- Batch i - 09Am/ Batch ii-02pm
13.09.2009 :- Batch i - 09Am/ Batch ii-02pm

80% Off Diploma Courses

PROFESSIONAL DIPLOMA IN MICROSOFT OFFICE — 3 Months — 3,500/=
DIPLOMA IN PRINTING TECHNOLOGY & DESK TOP PUBLISHING — 4 Months — ~~22,500/=~~ 4,500/=
DIPLOMA IN SERVER TECHNOLOGY & WEB PAGE DESIGNING — 3 Months — ~~22,500/=~~ 4,500/=
DIPLOMA IN GRAPHIC DESIGNING & ADVERDISEMENT MARKETING — 4 Months — ~~22,500/=~~ 4,500/=
DIPLOMA IN HARDWARE ENGINEERING & NET WORKING — 3 Months — ~~20,000/=~~ 4,000/=
DIPLMA IN AUTO CAD & ARCETECTURE DESIGNING — 3 Months — ~~22,500/=~~ 4,500/=
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE — 3 Months — ~~22,500/=~~ 4,500/=
DIPLOMA IN COMPUTER SCIENCE & PROGRAMMING — 4 Months — ~~22,500/=~~ 4,500/=
HONOURS DIPLOMA IN INFORMATION TECHNOLOGY — 4 Months — ~~32,500/=~~ 6,500/=

50% Off Advance Courses
DIPLOMA IN FILM TECHNOLOGY & VIDEO EDITING — ~~10,000/=~~ 5,000/=
DIPLOMA IN STUDIO TECHNOLOGY & MULTY MEDIA — ~~9,500/=~~ 4,750/=

வகுப்புக்கள் யாவும் கொழும்பிலிருந்து வருகைதந்திருக்கும் விரிவுரையாளர்களால் நடாத்தப்படும்.


## விளையாட்டுப் போட்டிக்கு 315 மாணவர்கள் புறப்பட்டனர்

யாழ்ப்பாணம்,செப்.5

கொழும்பில் நடைபெறவிருக்கும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக 315 மாணவர்கள் நேற்றுப்புறப்பட்டனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து போக்குவரத்துச் சபையின் ஆறு பஸ்களில் புறப்பட்ட இவர்கள் நேற்று முற்பகல் 11 மணிக்கு வவுனியாவை அடைந்து நேற்று மாலை தபால் ரயில் மூலம் கொழும்பு சென்றுள்ளனர்.

## நவாலியில் ஒரே இரவில் மூன்று மோட்டார்கள் திருட்டு

நவாலி, செப்.5

நவாலியில் ஒரே இரவில் மூன்று நீர் இறைக்கும் மோட்டர்கள் திருடர்களால் கழற்றி எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

நவாலி சென்.பீற்றேஸ் வீதியில் உள்ள வீடுகளிலிருந்தே இந்த மோட்டர்கள் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (1- 100)

## 'அந்தி ராகங்கள்' கலைநிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,செப்.5

தேவரையாளி இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்க வளர்ச்சி நிதிக்கான 'அந்தி ராகங்கள்' கலைநிகழ்வு எதிர் வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்து பிற்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (204)

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டன் சிற்றிசன் உடைய, 35வயது, பூரம் 4ம் பாதம், கிரக பாவம் 23½, செவ்வாய் குற்றமற்ற SOFTWEAR இஞ்சினியருக்கு தகுந்த மணப்பெண் தேவை. STUDENT VISA இல் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சீதனம் எதிர்பார்க்கப்படும்.
தொடர்பு T.P. :021 224 0252

### வீடு வளவு விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கில் உலவிக்குளம் பிள்ளையார் கோயிலுக்கு செல்லும் ஒழுங்கையில் காளி கோயிலுக்கு வடக்கு பக்கத்தில் உள்ள 5 பரப்புக் காணியும் புதிய பெரிய கல் வீடும் விற்பனைக் குண்டு.
தொடர்பு : 0212226196, 0212263403

## மூலிகைத்தோட்ட திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.5

வடமாகாண சபையின் மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அராலியில் அமைக்கப்பட்டுள்ள மூலிகைத் தோட்டத்தின் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்த கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு கே.என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார். (201)


Gr. 10 & 11 Paper Class
* Gr.1முதல்11வரை
* Eng.Medium 6 to 11
* Eng. Literature
* I.C.T
* O/L - REPEAT
* புலமைப்பரிசில் (Gr4)
SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.


## தரம் 5 விடைத்தாள் மதிப்பீடு இன்று இந்து மகளிரில் ஆரம்பம்

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இன்று சனிக்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளன.

சகல பிரதம பரீட்சகர், உதவிப்பரீட்சகர், எண்கணித பரீட்சகர் ஆகியோரை இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியில் ஒன்றுகூடுமாறு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (201)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
### பரமலிங்கம் ஸ்ரீதரன்
(France)

திதி: 05.09.2009

மண்ணில் 26★08★1958 — விண்ணில் 30★08★2007

ரயில் நிலைய வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

நினைவில் வாழும்
வ.பரமலிங்கம் குடும்பத்தினர்
(தந்தை). (சி/560749)

## மரண அறிவித்தல்கள்

### பாலேந்திரன் பரமேஸ்வரி



சாமியன் அரசடி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலேந்திரன் பரமேஸ்வரி நேற்று (04.09.2009) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தவனம் பாலேந்திரனின் அன்பு மனைவியும் கிரிதரன் (லண்டன்), காலஞ்சென்ற பிரபாகரன் மற்றும் நித்யா (யாழ்.பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தாயும் பொன்னையா - மகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற செல்லையா கிருஷ்ணபிள்ளை மற்றும் சுப்பிரமணியம் - பாக்கியம், செல்வலிங்கம் - புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாமியன் அரசடி,
கரவெட்டி.
(88603)
தகவல்:
பா.நித்யா (மகள்).

### அம்பலப்பிள்ளை நடராசா (பாதிரி)



கிளானை, கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும், பலாலியை வசிப்பிடமாகவும் தற்போது சிறுப்பிட்டியில் வசித்தவருமாகிய அம்பலப்பிள்ளை நடராசா (பாதிரி) நேற்று (04.09.2009) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அமபலப்பிள்ளை - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற முத்துப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் தங்கமனோரதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சித்திரவேலின் மாமனும் காலஞ்சென்றவர்களான தங்கம், மனோன்மணி, சுப்பிரமணியம் மற்றும் சிவனேசம், இலங்கைநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஹேமலதா, சர்மிளா, திலீபன், தீசன், பரன்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2009) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சிறுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.
(88548)
தகவல்: இலங்கைநாயகம் (சகோதரன்),
தங்கமனோரதி (மகள்).

### திருமதி அருணாசலம் வள்ளிப்பிள்ளை

சந்திரபுரம், மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருணாசலம் வள்ளிப்பிள்ளை நேற்று (04.09.2009) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சரவணமுத்து அருணாசலத்தின் (ப.நோ.கூ.ச. ஊழியர்) அன்பு மனைவியும் பவளமலர், சரவணபவானந்தம் (இ.போ.ச. ஊழியர், பருத்தித்துறைச் சாலை), புஸ்பராணி, மகாலக்குமி, மனோரஞ்சிதன் (ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி), ஜெயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் த.பால சுப்பிரமணியம், கந்தசாமி (சுன்னாகம் ஐயனார் ஆலய தர்மகர்த்தா), வே.பாலசுப்பிரமணியம், கஜேந்திரலிங்கம், தவராணி, சிவகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் சண்முகநாதன் (D.O), அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் சுப்பிரமணியம் (அதிபர்), ச.இலட்சுமிப்பிரபா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.09.2009) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரபுரம்,
மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி.
(88610)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கைதடி சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் அக்கு பஞ்சர் பயிற்சிநெறி நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.
சித்த ஆயுள்வேத மாகாண பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி எஸ்.துரைரத்தினம் மங்களவிளக்கேற்றுவதையும்-
சித்த ஆயுள்வேத வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி திருமதி பிரேமா சுரேஷ் சண்முகரத்தினம், பல்கலைக்கழக சித்தமருத்துவத் துறைத்தலைவர் வைத்திய கலாநிதி எஸ்.பவானி, கொரியா ஆயுள்வேத வைத்திய நிபுணர் ஹண்டே இயங்ஹவ் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வைத்தியர்களையும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## கொழும்பில் இடம்பெற்ற உள்ளூராட்சி வாரக் கண்காட்சியில் வலி. மேற்குப் பிரதேசசபைச் செயலாளருக்குக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப்.5

கொழும்பில் இடம்பெற்ற உள்ளூராட்சி வார தேசிய கண்காட்சியில் தேசிய பிரச்சினையான 'டெங்கு நோய்' கட்டுப்பாட்டினை வெளிக்கொணர்ந்த வலி.மேற்கு பிரதேச சபைச் செயலாளர் சு.புத்திசிகாமணியை மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் ஜனகபண்டார தென்னக்கோனும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியும் பாராட்டியுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் டெங்கு நோய் மிகவும் பிரச்சினைக்குரிய உயிர் கொல்லி நோயாக மாறியுள்ளது.

இந்நிலையில் யாழ்.மாவட்டத்தில் இருந்து டெங்கு ஒழிப்புத் தொடர்பான தீவிர பிரசாரத்தை பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டம் ஊடாக தேசிய ரீதியில் வெளிக்கொணர்ந்துள்ளார்.

கண்காட்சிகளின் 'நிஜ உருவத்தை' கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப தேசிய கண்காட்சியிலும் பிரதேச சபைச் செயலாளர் நுளம்பு போன்ற உருவத்தில் காட்சியளித்து விழிப்புணர்வு அடையச் செய்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு தொடர்பான தேசிய பிரச்சினையை பிரத்தியேக நிகழ்வாக வலி.மேற்கு சுழிபுரம் பிரதேசசபை மட்டுமே கொழும்புக் கண்காட்சியில் பிரகடனப்படுத்தியதை வடக்குமாகாண பிரதம செயலாளர் ஆ. சிவசுவாமி, வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் தி. இராசநாயகம், உள்ளூராட்சி ஆணையாளர் பி. ஜோன்சன் ஆகியோரும் பாராட்டியுள்ளனர். (203- 302)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு முன்னர் அறிவிக்கப்பட்டபடி நடைமுறைக்கு வராது

அச்சுவேலி, செப்.5

இலங்கை ஆசிரியர் சேவையின் புதிய பிரமாணக்குறிப்பு முன்னர் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் 2008ஜூலை முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வர மாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக திறைசேரி வெளியிட்டுள்ள அறிவித்தலில் ஆசிரியர் சேவைப் பிரமாணக்குறிப்பு 2008.07.01 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரமாட்டாது என்றும் அமுல் செய்ய வேண்டிய திகதி தொடர்பாக குறிப்பிடாமல் பின்னர் நடைமுறைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பை மாற்றி அமைத்து காலவோட்டத்துக்கு ஏற்ப புதிய நடைமுறைகளை உள்ளீர்ப்புச் செய்யவேண்டும் என வலியுறுத்தியதை அடுத்து ஆசிரியர் சேவையின் புதிய சேவைப்பிரமாணக் குறிப்பு 2008ஜூலை முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை ஆசிரியர் சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதிபர் சேவைப்பிரமாணக் குறிப்பு ஆகியவற்றை உரியகாலப் பகுதியில் அமுல் செய்யாமல் காலம் தாழ்த்துவது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்கங்கள் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளன. (203- 11)

## சுதேச மருந்து உற்பத்திப் பிரிவின் புதிய கட்டடம் அச்சுவேலியில் திறப்பு

அச்சுவேலி, செப்.5

அச்சுவேலியில் 90மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுதேச மருத்துவ மருந்து உற்பத்திப் பிரிவின் புதிய கட்டடத்திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற வுள்ளது.

'நிக்கொட்' நிறுவனத்தின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட இந்த கட்டடம் அச்சுவேலி மேற்கில் சங்கானை வீதியில் சமுர்த்தி வங்கிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

கட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராக சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவும் சிறப்பு விருந்தினராக சமூகநலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக சுதேச மருத்துவ அமைச்சின் செயலாளர் அசோகா பீரிஸ், யாழ். அரச அதிபர் கே.கணேஷ், சுதேச வைத்தியத்துறை வடக்கு மாகாண அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரன், ஆயுள்வேத ஆணையாளர் திருமதி ராணி குணவர்த்தன, சுதேச வைத்தியத்துறை வடக்கு மாகாணப் பணிப்பாளர் டாக்டர் திருமதி சீ.துரைரத்தினம், வடக்குமாகாண சுதேச வைத்தியத்துறை பணிப்பாளர் டாக்டர் ஏ. இ.ஞானசோதி, பிராந்திய ஆணையாளர் திருமதி பி.சிவலிங்கம், 'நிக்கொட்' மாவட்ட பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் என்.எஸ். ஆர்.சிவரூபன், யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன், வலி.கிழக்குப் பிரதேசசெயலர் சி.ஏ. மோகன்றாஸ், சித்தமருத்துவப் பிரிவுத் தலைவர் டாக்டர் திருமதி எஸ். பஞ்சராசா, சித்த மருத்துவப் பிரிவு பேராசிரியர் எஸ். பவானி, வடமாகாண தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் டாக்டர் திருமதி வி. சத்தியசீலன், டாக்டர் திருமதி என். நித்தியகுமார் ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (203- 11)

## அடையாள அட்டைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு நடமாடும் சேவையில் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், செப்.5

தேசிய அடையாள அட்டைக்கு நீண்ட காலமாக விண்ணப்பித்து இதுவரை கிடைக்கப்பெறாதவர்களின் ஒரு தொகுதி அடையாள அட்டைகள் எதிர்வரும் 12ஆம் திகதி யாழ். செயலகத்திற்கு எடுத்து வரப்படவுள்ளன.

இத்தகவலை யாழ். செயலகத்தில் இயங்கும் ஆட்பதிவுத்திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து யாழ். செயலகத்தின் ஊடாக தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்து நீண்ட காலமாகியும் இதுவரை கிடைக்கப்பெறாதவர்களுடைய 7ஆயிரம் தேசிய அடையாள அட்டைகள் யாழ்.செயலகத்திற்கு எதிர்வரும் 12ஆம் திகதி எடுத்து வருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு எடுத்துவரப்படவுள்ள தேசிய அடையாள அட்டைகளை எதிர்வரும் 12 ஆம், 13ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வடக்கின் வசந்தத் திட்டத்தின் கீழ் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் வைத்து வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (9)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப்.5

சங்கானை, இலுப்பைத்தாழ்வு வெல்வில் வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணிய கதிர்வேலாயுத சுவாமி ஆலய கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6.57 தொடக்கம் 8.35 மணிவரை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் அதிகாலை 4.30 மணிக்கு விநாயகர் வழிபாடு, ஆச்சார்ய சந்தி அனுஷ்டானம், யாகப்பூசைகள், வேதஸ்தோத்ர ஆசீர்வசன திருமுறைப் பாராயணம் என்பன இடம்பெற்று காலை 7.10 மணிக்கு ஸ்தூபிகள் அபிஷேகம், கும்பங்கள் வீதியுலா என்பன இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா வருதலும் இடம்பெறும்.

இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வும் நடைபெறும். (204)

* * *

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்.வண். வடமேற்கு, ஆனைக்கோட்டை, கண்ணகைபுரம் இராஜஇராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் கும்பாபிஷேகம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6.40 மணி தொடக்கம் 7.10 மணி வரை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

எதிர்வரும் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை சங்காபிஷேகம் நடைபெற்று மாலை அம்பாள் திருவீதியுலா வருதல் இடம்பெறும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (204)

* * *

வண்ணை, செப்.5

யாழ்.அடைக்கல அன்னை ஆலயத்தின் பெருவிழா கடந்த புதன்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இன்று சனிக்கிழமை காலை 6.45 மணிக்கு முதல்நன்மை திருப்பலியும், நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நற்கருணை விழாவும் நடைபெறும்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5.30 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 6.45 மணிக்கு பெருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். மாலை 5 மணிக்கு திருச்சொரூபப் பவனி நடைபெறும். (204-160)

* * *

சுழிபுரம், செப்.5

வட்டு.கிழக்கு, துறட்டிப்பனை முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் சங்காபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 5 மணிக்கு விசேட பூசை நடைபெற்று திருவூஞ்சல் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து அம்பாள் திருவீதியுலா வருதலும் இடம்பெறும். (204-28)

* * *

யாழ்ப்பாணம், செப் 05

யாழ்.வண்ணார்பண்ணை, காட்டுத்துறை அம்பலவாண விக்கினேஸ்வரப் பிள்ளையார் ஆலயத்தில் கும்பாபிஷேக தின மணவாளக்கோல விழாவும் சங்காபிஷேகமும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் மு.ப. 9.30 மணிக்கு சங்காபிஷேக பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி பிற்பகல் 5 மணிக்கு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வருதலும் இடம்பெறும். (204)

## சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மாணவர்களிடையே விழிப்புணர்வு நிகழ்வுகள்

சண்டிலிப்பாய், செப்.5

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவை மக்கள் மத்தியில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பல நிகழ்ச்சிகளை நடத்த முன் வந்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக ஒரு வாரகாலத்திற்கு கொடிவாரம் அனுஷ்டிக்கப்படவிருக்கின்றது.

கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். மாவட்ட மூத்த பிரஜைகள் பேரவையின் கூட்டம் தலைவர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெற்றபோது இதற்காகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எமது அறிவுக்களஞ்சியமாக விளங்கி வரும் முதியோர்களைக் கௌரவிக்கும் பழக்கம் இளைஞர்கள் மத்தியில் குறிப்பாக மாணவர்கள் மத்தியில் அருகி வருகின்றது. இதனால் முதியோர்களுக்கான இடத்தை வழங்க எவரும் முன்வருவதில்லை.

இது பற்றிய விழிப்புணர்வை வருங் கால சந்ததியான மாணவர்களுக்கு ஏற்படுத்தும் வகையில் இந்தக் கொடிவாரத்தை அனுஷ்டிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

அத்துடன் பண்டைய காலங்களிலிருந்து வீடுகளில் பாவித்து வந்த பொருள்கள் அடங்கிய கண்காட்சி ஒன்றும் நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதில் பேரவை ஈடுபட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203- 115)

## பெரும்போக விதைப்பு ஆரம்பமாகவுள்ளதால் கட்டாக்காலிகளைக் கட்டி வளர்க்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப்.5

பெரும்போக நெல்விதைப்பு எதிர்வரும் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதால் கட்டாக்காலிகளைக் கட்டி வளர்க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமையிலிருந்து கட்டாக்காலிகளை அதன் உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்று தேசவள விவசாயிகள் சம்மேளனத் தலைவர் அறிவித்துள்ளார். குடாநாட்டிலுள்ள விவசாயிகள் இவ்வருடம் பெரும்போக விதைப்புக்கான ஆயுத்தங்களை மேற்கொண்டுள்ளனர். நாளை ஞாயிற்றுக்கிழமைக்கும் பின்னர் விவசாயத்திற்கு குந்தகம் விளைவிக்கும் கால்நடைகள் மீது விவசாய சம்மேளன நிர்வாகிகள் நடவடிக்கை எடுப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

பிரபல தனியார் பாடசாலையில் பாலர் மற்றும் ஆரம்பக் கல்வி கற்பிப்பதற்கு GCE O/L, GCE A/L கற்ற பெண் ஆசிரியர்கள் தேவை. நல்லூர், அரியாலை, மானிப்பாய், சுன்னாகம், சித்தங்கேணி, புலோலி, அராலி, அச்சுவேலி ஆகிய இடங்களில் கற்பிக்க விரும்புவோர் விரும்பத்தக்கது.

*விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :*

**பணிப்பாளர்,**

இல. 68, செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

(வி/560737)

## தவறிவிட்டது

இணுவில் மேற்கு, இணுவில் என்னும் முகவரியுடைய பரஞ்சோதி ரோஜினி என்பவரின் தேசிய அ. அட்டையும் (807183451V), பரஞ்சோதி யசோதினி என்பவரின் தேசிய அ.அட்டையும் (785581016V) அடங்கிய பேர்ஸ் மானிப்பாய் வீதிக்கும் இணுவில் சந்திக்குமிடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 060200 7852, 0776268308 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (88530)

## வடமராட்சி லயன்ஸ் கழக இலவச மருத்துவ முகாம்

இடம்: யா/கரணவாய் மகாவித்தியாலயம்

காலம்: இன்று (06.09.2009) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.00-12.30 மணி

வடமராட்சி லயன்ஸ் கழகம்.

(வி/560738)

## சண்டிலிப்பாயில் கணனிப் பயிற்சி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் சண்டிலிப்பாய் கிளையினரால் கணனிப் பயிற்சிநெறி எதிர்வரும் புதன்கிழமை சண்டிலிப்பாய் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தப் பயிற்சிநெறியை மேற்கொள்ளவுள்ளோர் 3 ஆம் கட்டை, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள பிரிவு அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

மேலதிக விவரங்களுக்கு பிரிவு அலுவலகத்துடன் அல்லது 021 222 28286 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம். (201)

பாரம்பரிய மாட்டுச் சவாரிக்கழகம் நடத்தும்

## மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி-2009

காலம்: 13.09.2009 ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1 மணி

இடம்: கொத்துக்கட்டி சவாரித்திடல், நவாலியூர்

- ★ A, B, C, D ஆகிய பிரிவுகளுக்கு போட்டி நடைபெறும்.
- ★ A, B, C ஆகிய பிரிவுகளுக்கு முதலாம் பரிசாகத் துவிச்சக்கர வண்டி வழங்கப்படும்.
- ★ ஏனைய வெற்றியாளர்களுக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.
- ★ பார்வையாளர்களுக்கு பிரவேசம் இலவசம்.

நீண்டகாலத்தின் பின்னர் மீண்டும் நவாலியூர், கொத்துக்கட்டித்திடலில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி இடம்பெறுவதால் அனைத்து காளை உரிமையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு: செ.ஈசன்

தொ.பே: 0602006870, 0716578036

(88539)

**பாரம்பரிய மாட்டுச் சவாரிக்கழகம் - நவாலியூர்.**

உ

கணபதி துணை

## விவாஹ சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் சர்வமங்களகரமான விரோதி வருஷ ஆவணித்திங்கள் 21ஆம் நாள் (06.09.2009) ஞாயிற்றுக்கிழமை காலை 8.54 மணிமுதல் 10.39 மணிவரையுள்ள துலாலக்கினமும், உத்தரட்டாதி நட்சத்திரமும், அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| காஸ்யப கோத்திரம் | காஸ்யப கோத்திரம் |
| பிரம்மஸ்ரீ சபாரத்தினக் குருக்களின் பௌத்திரனும் | பிரம்மஸ்ரீ சுப்பையாக் குருக்களின் பௌத்திரியும் |
| பிரம்மஸ்ரீ தியாகராஜக் குருக்களின் தௌஹித்திரனும் | பிரம்மஸ்ரீ கனகசபாபதிஐயரின் தௌஹித்திரியும் |
| எமது சிமந்த புத்திரனுமாகிய | எமது துவிதிய புத்திரியுமாகிய |
| **சிரஞ்சீவி கௌரிதர சர்மா** அவர்களுக்கு | **சௌபாக்கியவதி சிந்துஜா** அவர்களை |

கன்னிகாதான திருமாங்கல்யதாரண பாணிக்கிரகணஞ் செய்ய அருள்மிகு சிவன் அம்மன் அருளாசியுடனும் அருள்மிகு திருநெல்வேலி பத்திரகாளி அம்பாளின் பரிபூரண அனுக்கிரகத்துடனும் பெரியோர்கள் ஆசியுடனும் நிச்சயிக்கப்பெற்று, வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய கல்யாண மண்டபத்தில் (நாச்சிமார் கோயில்) மேற்படி சுபமுகூர்த்தம நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்டமித்ர பந்துக்கள் சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சமாவர்த்தனம்:**
நாளை(06.09.2009) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4 மணிக்கு

**வதுவரகிரஹப்பிரவேசம்:**
06.09.2009 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

**தங்கள் நல்வரவை நாடும்:**

| | | |
|---|---|---|
| சிவப்பிரம்மஸ்ரீ கி.கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் ஸ்ரீமதி கிருஷ்ணாம்பாள் தம்பதிகள் கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். தொ.பே.021 222 5440 | (இருவீட்டார் அழைப்பு) | சிவஸ்ரீ [illegible] குருக்கள் ஸ்ரீமதி [illegible] தம்பதிகள் இல 18, துரைராஜா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். தொ.பே.021 222 5851 |

**வரவேற்பாளர்கள்:**

| | | |
|---|---|---|
| பிரம்மஸ்ரீ கி.கௌரிகாந்த சர்மா | | சிவஸ்ரீ ம.பாஸ்கரக்குருக்கள் தம்பதிகள், |
| பிரம்மஸ்ரீ கி.கௌரிசங்கர சர்மா | | சிவஸ்ரீ ம.சுதாகரக் குருக்கள் தம்பதிகள், |
| பிரம்மஸ்ரீ கி.கௌரிபால சர்மா | சுபமஸ்து. | சிவஸ்ரீ ம.பிரபாகரக் குருக்கள் தம்பதிகள், |
| | | பிரம்மஸ்ரீ க.உமாசுதசர்மா தம்பதிகள். |

(88499)

## யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் குத்தகைக்கு அல்லது வாடகைக்கு வெற்றுக்காணி தேவை

பிரசித்திபெற்ற நிறுவனத்திற்கு வெற்றுக்காணி களஞ்சியசாலைக்கு கீழ் காணும் வசதிகளுடன் தேவைப்படுகிறது.

- ★ யாழ்ப்பாண நகர எல்லைக்குள்
- ★ பிரதான வீதி முகப்புடன் கொள்கலன்கள செல்லக்கூடிய
- ★ 50 பேர்ச் அல்லது மேல் விரும்பத்தக்கது.

பதிவு செய்வதற்கு
தயவு செய்து கீழ் குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
0773219435, 0773295715

## கண்ணீர் அஞ்சலி

எமது பரிபாலன சபையின் முன்னாள் முகாமையாளர் அமரர் சு.சிவநேசன் அவர்களின் பாசமிகு பாரியார்

**சிவநேசன் புவனேஸ்வரி**

காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய மாத்தனை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோயில் பரிபாலன சபையினர்.
சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு கொக்குவில்.

(88536)




புன்னாலைக்கட்டுவன், மல்லாகத்தைச் சேர்ந்த **பரிமேலழகன்-உமாச்சந்திரி** தம்பதியரின் இரட்டைப் புதல்வர்கள் தமது 5 ஆவது பிறந்தநாளை மல்லாகத்தில் உள்ள தமது அப்பம்மா இல்லத்தில் மிகச் சிறப்பாகக் குதூகலத்துடன் கொண்டாடுகிறார்கள்.

இவர்களை அப்பா, அம்மா, புன்னாலைக் கட்டுவனில் இருக்கும் தாத்தா, அம்மம்மா ஜேர்மனியில் வசிக்கும் ஆசை மாமா மல்லாகத்தில் வசிக்கும் அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமாத் தாத்தா, மாமிப் பாட்டி, செல்வா அத்தை, மாமா, கொழும்பில் வசிக்கும் பெரிய அத்தை, பெரிய மாமா, கனடாவில் வசிக்கும் சின்ன அத்தை, சின்ன மாமா, மச்சாள்மார், மச்சான்மார் ஆகியோருடன் அந்தணப் பெரியோர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல புன்னாலைக் கட்டுவன், ஆயக்கடவை சித்தி விநாயகர் பெருமானையும், மல்லாகம் கழம்பதி விநாயகப் பெருமானையும் வேண்டி வாழ்த்துகிறார்கள்.

[illegible]

(88540)

## தேவை

**கலர் லாப் ஒன்றிற்கு**

- ★ பில் கிளாக் / காசாளர்
- ★ புகைப்படப் பிடிப்பாளர்
- ★ கிராபிக் டிசைனர்

சுயவிவரத்துடன் அடையாள அட்டையின் போட்டோப் பிரதியையும் இணைத்து கீழ் உள்ள முகவரிக்கு நேரில் அல்லது தபால் மூலம் 15.09.2009 ற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

**விஸ்டா விஷன்**
347, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(88534)

## மாற்று ஆற்றலுடையோருக்கு தள்ளு வண்டில்கள்

நாவாலி, செப்.5

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாற்று ஆற்றலுடையோருக்கான தள்ளு வண்டில்கள் பிரதேச செயலக சமூக சேவைப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளன.


இந்த வண்டில்களைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களை உடன் பிரதேச செயலகத்திற்கு வந்து இவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு சமூகசேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா கேட்டுள்ளார். (203-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்கள் தரும் பதிவுகள்




யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஸ்ரீலங்கா பெண் சாரணர் இயக்கத்தின் தலைவி திருமதி அருந்ததி சந்திரதிலகா, செயலாளர் திருமதி ஸ்ரீமா பெரேரா ஆகியோர் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்திற்கு விஜயம் செய்தபோது அவர்களை சுவாமி சித்திருபானந்தா வரவேற்பதையும் அருகில் அஞ்சலியகத்தைச் சேர்ந்த அருட்திரு டேமியன் அடிகளார், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, சேவாச்சிரம இயக்குநர்களில் ஒருவரான மு.சுந்தரலிங்கம் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)



வலிகாமம் தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் கோயில்பற்று இந்து சமய விருத்திச் சங்கத்தின் முன்பள்ளி விளையாட்டுப் போட்டி மானிப்பாய் விவேகானந்தா பாடசாலையில் அண்மையில் நடைபெற்றது.

சங்கத் தலைவி செல்வி இ.சுப்பையாபிள்ளை தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினரான லயன். சிறி. விமலேஸ்வரன், சிறப்பு விருந்தினரான சி.வரதராசா, செயலாளர் இரா.வசந்தகுமார் ஆகியோர் நிற்பதைக் காணலாம். (படம்: இரா.சுதா)



வலிகாமம் கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சிறந்த தோட்டங்கள் தெரிவுப் போட்டியில் சிரேஸ்ட இடைநிலைப் பிரிவில் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 3 ஆம் இடத்தைப் பெற்றது. தெரிவு செய்யப்பட்ட தோட்டத்தின் ஒரு பகுதியையும் வித்தியாலய அதிபர், உப அதிபர், விவசாய பாட பொறுப்பாசிரியர், மாணவர்கள் நிற்பதையும் காணலாம். (9)




கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தினூடான சமூக முன்னெடுத்தல் குழுவினால் வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் தங்கியுள்ள மக்களுக்கு ஒரு தொகுதி உணவுப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

உணவுப் பொருள்களை குழுவின் செயலாளர் செல்வி பொ.ரம்மியா, தென்மராட்சிப் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் திருமதி. கே.ரகுநாதனிடம் வழங்குவதையும் அருகில் குழுவின் நிர்வாக உறுப்பினர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம். (288)



புலோலி புற்றளை சித்திவிநாயகர் ஆலய பெருந்திருவிழாக் காலத்தில் தொடர் ஆன்மீக சொற்பொழிவாற்றிய பண்டிதர், சைவப் புலவர் பொன். சுகந்தனுக்கு ஆலய பரிபாலன சபையினரின் சார்பில் இளைப்பாறிய கடற்றொழில் பரிசோதகர் சு.கணபதிப்பிள்ளை நினைவுச் சின்னம் வழங்குவதைப் படத்தில் காணலாம். (236)



கைதடி வடக்கு யூல்பிற்றர் கல்வி நிலையத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவில் விருந்தினராகக் கலந்துகொண்ட நாவற்குழி மகா வித்தியாலய பகுதித் தலைவர் ஆ.க.ரவீந்திரன் தரம் 3 மாணவ்ன் த.இலக்கியனுக்கு பரிசில் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.



நெடுந்தீவு புனித யூதா தேயு கடற்றொழிலாளர் சங்கத்தால் அமைக்கப்படவுள்ள மீன் ஏல விற்பனை நிலையக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நெடுந்தீவு பங்குத் தந்தை அருட்திரு றோய் பெனடிற் அடிகள் நட்டு வைப்பதைக் காணலாம். (படம்: [illegible])



யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான பிளென்ரி பூட்ஸ் தனியார் நிறுவனம் போஷாக்கு உணவுப் பொதியொன்றை அண்மையில் வழங்கியுள்ளது.

சிலோன் பிஸ்கிட்ஸ் நிறுவனத்தின் துணை நிறுவனமான பிளென்ரி பூட்ஸ் தனியார் நிறுவனம் சமபோஷ என்ற போஷாக்கு உணவின் உற்பத்தியாளரும் ஆகும். உணவுபொதி கையளிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ்.அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இடம்பெற்றது. மேற்படி நிறுவனத்தின் பணிப்பாளரும் பொது முகாமையாளருமான ஷம்மி கருணாரட்ண பொதியை அரச அதிபர் கே.கணேஷிடம் கையளிக்கிறார். யாழ்.செயலகத் திட்டப் பணிப்பாளர் எம்.பிரதீவனும் படத்தில் உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## டேவிற் அலெக்ஸ்சாண்டர்

### (உரிமையாளர் - லொயலாஸ்)

யாழ்ப்பாணம், மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், இராஜேந்திரா வீதியை வசிப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள லொயலாஸ் ஸ்தாபனம் மற்றும் பற்றிக்ஸ் வீதியில் அமைந்துள்ள லொயலாஸ் திருமண மண்டபம் ஆகியவற்றின் உரிமையாளருமான டேவிற் அலெக்ஸ்சாண்டர் கடந்த 30.08.2009 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் டேவிற் - டேவிற் அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு அந்தோனிப்பிள்ளை -அந்தோனிப்பிள்ளை பாக்கியம் தம்பதியினரின் அன்பு மருமகனும், றெஜினாவின் அன்புக் கணவரும், இக்னேஷியஸ் லொயலா (உதயன் - பிரான்ஸ்), கிளென்சியஸ் லொயலா (பொபி), மொறிஷியஸ் லொயலா (அகில் - பிரான்ஸ்), ஜெரின் அலெக்ஷியா (பிரான்ஸ்), ஜறின்சோபியா (வர்த்தக வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சியாமளா (பிரான்ஸ்), கீதா (மக்கள் வங்கி, திருநெல்வேலிக் கிளை), நிலாஜினி (பிரான்ஸ்), தர்ஷன் (திலக் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற கிறேகறி மற்றும் அல்வின், தேவு (பிரான்ஸ்), புவனா, ராஜேஸ் (பிரான்ஸ்), குமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரவி மற்றும் செல்வக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயராணி (பிரான்ஸ்), றாகிலா, காலஞ்சென்ற செல்வம் மற்றும் கீதபொன்கலன் (கீதா-பிரான்ஸ்), சிறி (பிரான்ஸ்), ஜெனி (பிரான்ஸ்), ஆன்றோஸ், றோக்நாதர், பீற்றர்போல் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் எறிக் (பிரான்ஸ்), எறின், றெஜிசியா (பிரான்ஸ்), ஸ்ரெபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.



அன்னாரின் பூதவுடல் இல.42/9, இராஜேந்திரா வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் இருந்து இன்று (05.09.2009) சனிக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**

தொடர்பு இல.:
021 222 3352
இல.42/9,
இராஜேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அத்வை அறுபதில் சந்நிதியான் ஆச்சிரம ஸ்தாபகர் மோகனதாஸ் சுவாமிகள்



**சமய, சமூகத் தொண்டுகளைச் சிறப்புடன் முன்னெடுத்துப் புகழீட்டிவரும் சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஸ்தாபகர் மோகனதாஸ் சுவாமிகள் கடந்த 31.08.2009 திகதியன்று தமது 60ஆவது வயதில் கால்தடம் பதித்துள்ளார். அதனையொட்டி இவ்ஆக்கம் இங்கு பிரசுரமாகிறது.**

தேடி வருவோர்களை தேற்றி வைக்கும் அருட்திறம் கொண்ட புண்ணியத் தலம் செல்வச்சந்நிதி. இத்தலத்தில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளும், செயற்பாடுகளும் காலாதிகாலமாகப் பின்பற்றப்பட்டு வரும் பாரம்பரியச் சிறப்பு மிக்கவை. இதனாற்தான் தேடி வருமடியார்கள் உரிமையோடு உறவு கொண்டாடித் திருப்தியடைந்து இவ்விடத்தில் தங்கியிருந்து, ஆறித்தேறி மீண்டும் தம்மில்லங்கள் திரும்புவதும், இன்னும் பலர் அவ்வப்போது எம்பெருமானிடத்தில் உறவு கொண்டாடி மீள்வதும் இப்புண்ணியத்தலத்தில் தொடர்ச்சியாக நடந்துவரும் சம்பவங்களாகும்.

இவ்விதம் தன்னை நாடித்தேடி வருமடியார்களின் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்து, பசிப்பிணி தீர்த்து அடியவர்களைக் கொள்ளை கொள்பவன் சந்நிதியான். முன்னர் இதற்காக அறுபதுக்கும் மேற்பட்ட மடங்களை தனது அருளாசிக்குட்படுத்தி அவற்றின் மூலமாக பல்லாயிரக் கணக்கான அடியவர்களின் பசிப்பிணியைத் தீர்த்து எம்பெருமான் அவர்களை ஆட்கொண்டு வந்துள்ளார். ஆயினும் கடந்த கால அசம்பாவிதங்களால் தற்போது ஒரு சில மடங்களே அன்னதானப் பணியை மேற்கொண்டு வருகின்றபோதிலும் சந்நிதி வேலவனுடைய அருட்திறத்தின் வாயிலாக வருடத்தின் எல்லா நாள்களிலும் முழுநேரச் சேவையாகத் தனது பணிகளை பன்முகப்படுத்தி ஆற்றி வருவது சந்நிதியான் ஆச்சிரமம் ஆகும்.

சந்நிதி வேலவனுடைய ஆலயத்தின் முகப்பு வீதியின் வலது புறத்தில் மிகவும் அடக்கமான வடிவமைப்புடன் எம்பெருமானுடைய வழி நடத்தற்பிரகாரம் செயற்பட்டு வருவதே சந்நிதியான் ஆச்சிரமம். இந்த ஆச்சிரமத்தின் ஸ்தாபகரும் நிர்வாகியுமாக இருப்பவர் அருளாளர் மோகனதாஸ் சுவாமிகள் ஆவர். தன்னுடைய நிருவாகத் திறமையாலும் காத்திரமான வழி நடத்தல்களாலும் ஆச்சிரமத்தின் பணிகளையெல்லாம் பன்முகப்படுத்தி அன்னதானப் பணியுடன் மட்டும் நின்றுவிடாது அதற்கப்பாலும் பலவிதமான சமய, சமூக, கல்விப்பணிகளையெல்லாம் எம்பெருமானுடைய பரிபூரண அருளாசியுடன் அவர் நிறைவேற்றி வருகின்றார். எல்லோராலும் மோகன் சுவாமிகள் என்றழைக்கப்பட்டு வரும் மோகனதாஸ் ஐயா அவர்கள் குருவருளும், திருவருளும் நிரம்பப் பெற்றவர். இவ்வாறான இறை ஆசிர்வாதத்துடன்தான் வியப்புக்குரிய பணிகளை எல்லாம் இலகுவாகவும், சாமர்த்தியமாகவும் நிறைவேற்றிக்கொள்வது சாத்தியப்பாடுடையதாகும். ஏனெனில் மோகனதாஸ் சுவாமிகளின் குருவாக அமைந்தவர் மயில்வாகனம் சுவாமிகளாவர். இவர் சந்நிதி வேலவனுடைய பிரியத்துக்குரிய அருளாளர். எனவேதான் சந்நிதியானுடன் தான் கொண்ட தீராப் பிரியத்தின் காரணமாகப் பெற்ற அருட்திறத்தால் பலரதும் இடர்பாடுகளையும், தீராப் பிணிகளையும் தீர்த்து அவர்களை

**துரை. கணேசமூர்த்தி**
**ஆசிரியர்,**
**யாழ்ப்பாணக் கல்லூரி.**

தக்கபடி ஆற்றுப்படுத்தி வைத்த அருளாளராக அவர் விளங்கினார். இத்தகைய ஒரு மகானின் வழி நடத்தலிலும், அரவணைப்பிலும் வளர்ந்து இன்று சந்நிதியானுடைய திருவருளுக்குப் பாத்திரமானவராகத் திகழ்பவரே மோகன் சுவாமி.

1949ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31 ஆம் நாள் அலை கடல் தாலாட்டும் வல்வெட்டித்துறையில் மாரிமுத்து செந்தில்வேல் ஐயா அவர்கட்கும் மல்லிகாதேவி அம்மையாருக்கும் மகனாக அவதரித்த சுவாமிகள் சந்நிதியானுடைய அனுக்கிரகத்தின் மூலம் தேர்ந்த அருளாளராகத் திகழ்கின்றார். வள்ளுவப் பெருமான் கூறுவது போன்று-

> "மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்கு இல்லென்ப
> தன்னுயிர் அஞ்சும் வினை"

என்பதற்கிணங்க மோகன் சுவாமிகளின் மன்னுயிர்ப் பணியானது தொடர்ந்தும் வளம் பெற்று வளர்ந்து செல்லும் என்பதுடன் அவர் தம் வாழ்வும் பணியும் இடர்ப்பாடுகள் எதுவுமின்றித் தழைத்தோங்குவதாக அமையும். ஆதலினாற்தான் அந்தச் சந்நிதியானுடைய பெருந்திருவிழாக் காலங்களிலேயே சுவாமிக்ளின் 60ஆவது அகவைகளில் ஆரம்பமும் அமைந்து விட்டது போலும். "எல்லாம் அவன் நடத்துவிக்கிறான். நாங்கள் சந்நிதியானுடைய கருவியாக இருந்து அவனது கட்டளைகளை இயன்ற மட்டும் செய்கிறோம்" என்று மோகன் சுவாமிகள் அடிக்கடி கூறுவதற்கு அமைவாக அவரது 60ஆவது அகவைகளிலும் இனிவரும் பல்லாண்டு காலங்களிலும் எல்லாம் வல்ல சந்நிதி வேற்பெருமான் அணியும் துணையும் செய்து அவரை வாழ வைத்து அருளாசி புரிவதற்கு அப்பெருமானை வேண்டிநிற்கின்றோம்.

"நாளும் பொழுதுமென நாடுவார் நலங்காண நிலைத்த சுவாமிகளின் நலம் பெருகி நாள் பெருகி நித்திலத்தில் நீடு வாழ சந்நிதியான் அணி செய்வான்". ★

# நேர்மையும் அரசியல் நாகரிகமும் கொண்டிருந்தவர் அமரர் தர்மலிங்கம்



இலங்கை நாடாளுமன்றத்தில் 1960ஆம் ஆண்டு தொடக்கம் 1983ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இருபத்திமூன்று ஆண்டுகள் உடுவில், மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து, மக்களுக்கு சேவையாற்றி அவர்களின் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்றிருந்தவர் விஸ்வநாதர் தர்மலிங்கம். அவரது 24வது சிரார்த்ததினம் இம்மாதம் 2ஆம் திகதி இடம்பெற்றது.

அவர் மிகவும் செல்வம் படைத்த குடும்பத்தில் ஒரே வாரிசாக விளங்கி பாமர மக்களின் தோழனாக இருந்து அவர்களின் முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர். வறுமையின் கொடுமையிற் சிக்கியோர் சோசலிசம், சமதர்மம் பேசுவதும் சிறிது செல்வம் சேர்ந்தவுடன் அத்தகைய பேச்சை நிறுத்துவதுடன் நில்லாமல் அதற்கு எதிரான சக்திகளுக்கு ஆதரவு கொடுப்பதையும் காண்கிறோம். ஆனால் செல்வக் குடும்பத்தில் பிறந்த "தர்மர்" துணிவுடனும் தெளிந்த சிந்தனையுடனும் சமதர்மம் பற்றி பேசி அதனை நடைமுறையிலும் கடைப்பிடித்தார்.

1948ஆம் ஆண்டு இலங்கைச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து கற்றார். அக்காலத்தில் தான் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமாக இருந்த அமரர். அமிர்தலிங்கத்துடன் சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். இருவரும் அங்கு நெருங்கிய நண்பர்களாகி சட்டக் கல்லூரியில் தமிழ் மன்றத்தை உருவாக்கி தமது தமிழ் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.

தர்மர் சட்டக்கல்லூரியில் கற்கும் காலத்தில் 1949ஆம் ஆண்டு தர்மரின் அன்பு மனைவியான கமலாம்பிகை காலமானார். அப்பொழுது அவரின் செல்வங்களான சித்திரலேகா, சித்தார்த்தன் (இன்றைய புளொட் தலைவர்) இருவரும் விவரம் தெரியாத சிறுவர்களாக இருந்தனர். பிள்ளைகளின் நிலையைக் கருத்திற்கொண்டு சட்டக் கல்விக்கு முழுக்குப் போட்டு விட்டு கந்தரோடை கிராமத்துக்கு வந்து தனது மனைவியின் சகோதரியான சரஸ்வதி பெரியோர்களின் விருப்பத்திற்கு இணங்கி திருமணம் செய்து பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார்.

தனது கிராமத்தில் வாழ்ந்துகொண்டு உள்ளூராட்சி அரசியலில் உடுவில் கிராமசபையின் தலைவராகப் பல ஆண்டுகள் சேவையாற்றினார். உடுவில் கிராமசபையின் ஒரு பகுதியான சுன்னாகம் பட்டின சபையாக மாறியபோது அப்பட்டின சபையின் தலைவராகவும் இருந்துள்ளார். 1960ஆம் ஆண்டு தொகுதிகள் நிர்ணய ஆணைக் குழுவினர் உடுவில் என்ற ஒரு புதிய நாடாளுமன்றத் தொகுதியை உருவாக்கினார்கள். தந்தை செல்வாவின் அப்போதைய தமிழரசுக்கட்சியினர் தர்மலிங்கம்தான் இத்தொகுதிக்கு பொருத்தமான வேட்பாளர் என முடிவு செய்து 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலில் போட்டிக்கு நிறுத்தப்பட்டார். இவருடன் கம்யூனிஸ்ட் வி. பொன்னம்பலம், ஹன்டி பேரின்பநாயகம் வீ.வீரசிங்கம் போன்ற கல்விமான்கள் உட்பட பலர் போட்டியிட்டார்கள். ஈற்றில் தர்மர் பெருவாரியான வாக்குகளினால் வெற்றியீட்டினார். தன்னை எதிர்த்துப் போட்டியிட்டவர்களுடன் மிகவும் நட்பாகவும் பரஸ்பர மதிப்புடனும் பழகும் நாகரிகமான அரசியல்வாதியாகத் திகழ்ந்தார். தொடர்ந்து நடைபெற்ற தேர்தல்களில் எல்லாம் வெற்றியீட்டி 1983ஆம் ஆண்டு 6ஆவது அரசியல் திருத்தச்சட்டத்திற்கு சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்ததினால் இவரின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது.

மிகச் சாதாரணமான வார்த்தைகளில் நகைச்சுவையாகவும் கூறும் பண்பு அவரிடமிருந்தது. விளங்கவைக்கக்கூடிய ஆற்றல் அவரிடமிருந்ததால் அவருடைய மேடைப் பேச்சுக்களோ, பாராளுமன்ற உரைகளோ தெளிவாகவும், ஆணித்தரமாகவும் இரத்தினச் சுருக்கமாகவும்

**ஆ.சி.கணேசவேல்**
**(அகில இலங்கை சமாதான நீதிவான்)**
**கந்தரோடை.**

அமைந்திருக்கும்.

ஏழைகளை வாழ வைப்பதில் இன்பம் கண்டவர். இவரின் "காமதேனு" என்னும் வாசஸ்தலத்தில் கற்பகதருவைக் காணாது மக்கள் கண்ணீர் வடிக்கின்றனர்.

அரசியலிலும், சமய, சமூகப் பணிகளிலும் பிரகாசித்து ஈழத்தமிழர் வரலாற்றில் தனி இடத்தைப் பெற்ற அருந்தலைவர் தர்மலிங்கம் படுகொலை செய்யப்பட்டதையடுத்து மக்கள் அவர் சேவையை இழந்தனர். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



அமரர்

## பரமு பசுபதி

மலர்வு: 12 * 06 * 1934

உதிர்வு: 06 * 08 * 2009

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு வருகைதந்து துயரில் கலந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும் தொடர்பு சாதனங்கள் மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும் வேறுபல வழிகளில் உதவி செய்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (05.09.2009) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

மகன் - பக்தராசா (கிளி)
குடும்பத்தினர்.

கைதடி தெற்கு. (88410)


# ஆலய புனருத்தாரணத்துக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது

சுழிபுரம், செப்.5

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலய புனருத்தாரண வேலைகள் நிறைவு செய்வதற்கு மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த வெளிநாட்டில் வசிக்கும் மக்கள் ஒரு தொகை நிதியை ஆலய பரிபாலன சபையிடம் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி உதவியூடாக ஆலய புனருத்தாரண வேலைகள் துரிதமாக நிறைவடைந்து வருவதாகவும் குறிப்பிட்ட தினத்தில் ஆலய கும்பாபிஷேகம் நடைபெறும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(201-28)


## முன்பள்ளி ஆசிரியர்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபலமான முன்பள்ளிக்கு ஆசிரியைகள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகுதியானவர்கள் சுய விபரத்துடன் 7 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. :
மே/பா உதயன் 3935 (88484)



Hatton National Bank

# அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10.07.2008இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கையாளரின் அடகுநகைகள் 12.09.2009 சனிக்கிழமை காலை 9 மணிக்கு இல. 212, 214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதிமிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா 500) செலுத்தி

அல்லது

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏல விற்பனைத் திகதியினைப் பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

- ஹற்றன் நஷனல் வங்கி. (சி/560737)



# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் விஸ்வலிங்கம்

## சிறிஸ்கந்தராசா

(C..T.B திருத்துநர்)

அன்பானவனே பாசமிகு மகனே – சிறி
நீ எம்மை விட்டுப் பிரிந்து சென்றாலும் உன்
நினைவு எங்களை விட்டுப் பிரியாது.
உமது ஆத்மா சாந்தியடைய விநாயகப்
பெருமானையும் விசவத்தனை முருகனையும்
வழக்கம்பரை தாயையும் பிரார்த்திக்கின்றோம்.

மண் மகிழ: 25.08.1965
மனம்நெகிழ: 06.08.2009

என்றும் உன் நினைவில்
அம்மா, சகோதரர்கள், மனைவி,
மகன், மைத்துனர்மார்,
மைத்துனிமார்.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம். (சி/560703)






A/L 2009 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே
உங்களுக்காகவே விசேட பிரிவுகள் ஆரம்பம்

| Diploma Courses | |
|---|---|
| Courses | Duration |
| Diploma in Microsoft Office | 4Months |
| Diploma in Desktop Publishing | 3Months |
| Diploma in Internet Technology | 4Months |
| Diploma in Hardware Technology | 4Months |
| Diploma in Computer Programming | 4Months |
| Diploma in Computerized Accounting | 4Months |
| Diploma in Audio & Video Editing | 4Months |
| Diploma in Eng Drawing & AutoCAD | 4Months |
| Diploma in DataBaseManagement | 4Months |
| Diploma in Visual Programming | 4Months |
| Certificate Courses | |
| Certificate in AutoCAD | 2Months |
| Certificate in Java Programming | 2Months |
| Certificate in Visual Basic Programming | 2Months |

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

பிரிவு 1 -14/09/2009
பிரிவு 2 -19/09/2009
பிரிவு 3 -23/09/2009
பிரிவு 4 -26/09/2009
காலை 10.00 மணி

இரண்டு Diploma கணனிக் கற்கை நெறிகளுக்கு பதிவினை மேற்கொள்ளும் மாணவர்கள் 3வது Diploma கற்கை நெறியினை முற்றிலும் இலவசமாக கற்கும் வாய்ப்பினை பெற்றுக் கொள்கின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna
T.P 021 222 2831 Fax: 021 222 6933



# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

## கந்த்வனம் தர்ஷிகா

(மாணவி – கோக்குவில் இந்துக் கல்லூரி)

சிந்தாமணி விநாயகர் அருளியது 25.05.1990

சிந்தாமணி விநாயகர் கழல் சேர்ந்தது 23.08.2002

திதி: 05.09.2009

கந்தவன்ம் மனையில்
களித்தாறி மீண்டென்கால்
வந்திடுவாய் என்றே தான்
வரந் தந்தனுப்பினரோ?
சிந்தாமணி கஜனார்
செல்வி தர்ஷிகா மகளே!
சிந்தாமணியின் பாதம்
தித்திக்க வாழி அம்மா!

அப்பா, அம்மா,
சகோதர், சகோதரிகள்,
உற்றார், உறவினர்கள்.

'கவி போட்டோ',
நவாலி தெற்கு. (88420)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 11.11.1983 இறப்பு: 16.09.2008

## தங்கராசா ஜேந்தன்

(முகாமைத்துவ உதவியாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்)

வரம் கேட்டுப் பெற்றெடுத்தோம்
ஜெசிக்குட்டி. தந்தையும், தாயும்
தவிக்கும் பொழுது எங்கே சென்றாய்?
உன் தம்பியைத் தூக்கி தாய்போல
வளர்த்தவனே! அன்பு காட்ட
அவனுக்கு உன்னைவிட யார் உள்ளார்?
பந்தம் என்று திரும்பி நீ வாராயோ? வாராயோ?



பிறப்பு: 30.11.1946 இறப்பு: 16.09.2008

## கணபதி திருநாவுக்கரசு

(ஒப்பந்தகாரர், நீர்ப்பாசனத் திணைக்களம், வவுனிக்குளம்)

அன்புமொழி பேசும் அருமையான அப்பாவே!
தனியவளாய் இருந்தும்-நல்வாழ்வு காண
வெளிநாடு அனுப்பினாய் அன்பு மனைவியை
ஆழமாக நேசித்தவரே மீண்டும்
வந்து எமக்கு ஆறுதல் சொல்வாயோ!
உங்களைவிட யார் உள்ளார் எமக்கு



பிறப்பு: 17.08.1991 இறப்பு: 16.09.2008

## பொன்னுத்துரை கவிந்தன்

(மாணவன் மு/பாண்டியன் குளம் மகாவித்தியாலயம்)

சின்னவன் நீயென்று எல்லோரும்
அன்பு காட்டினோம் அன்பான
அப்பாவை, அம்மாவை அரவணைத்த
சோதரர்களை விட்டு விட்டு
ஏன் சென்றாய்! உனை நினைத்து
உயிர் வாழும் பாவிகளாய் போனோமடா!

வ.யோகேஸ்வரன்
வவுரம்மதி,
கரவெட்டி கிழக்கு. (88461)

தகவல்:
தங்கராணி மோகனராணி
(ஜேர்மனி).



CATHOLIC COLLEGE OF HIGHER STUDIES
(C.C.H.S)

English course - 6 months
Week days 3.30 - 5.30 p.m.
6th BATCH BEGINS SHORTLY
Good Opportunity
for Students Sat A/L
Vacancies exists only for a few more
**Apply Early**
**Contact: AHAVOLI, St. Patrick's Road, Jaffna.**


# தொழில் பயிலுநர் திட்டத்தின்கீழ் பயிலுநர்களுக்கு பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப்.5

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் தேசிய தொழில் பயிலுநர் திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாண பயிலுநர்களுக்காக பயிற்சிநெறியை ஆரம்பிக்கவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியை பயிலவுள்ளோர் விண்ணப்பங்களை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்பதாக "முகாமையாளர், மனித வளமும் நிர்வாகமும், இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம், இல.582, காலி வீதி, கல்கிசை" என்னும் முகவரிக்கு தபால் உறையின் இடது புறமேல் மூலையில் "முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுநர்களை சேர்த்தல் 2009" எனக் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு ஜேர்மன் தொழில் நுட்பப் பயிற்சி நிறுவகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவங்களையும் மேலதிக தகவல்களையும் www.cgtti.slt.lk என்னும் இணையத்தளத்தினூடாகப் பார்வையிட முடியும் என அவர் தெரிவித்துள்ளார். (201)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பணியில் மகிழ்வு கண்ட கூட்டுறவாளர் சிதம்பரப்பிள்ளை



அளவான பேச்சு, அமைதியான நடத்தை, ஆர்ப்பாட்டம் இல்லாத செயற்பாடு, எளிய நடை, எவரையும் அன்புடன் உபசரிக்கும் பாங்கு, எடுத்துக்கொண்ட தீர்மானத்தினின்றும் எந்த நிலையிலும் விடுபடாத துணிவு, இத்தகைய பண்புகள் கொண்ட கட்டைவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவு சங்கத் தலைவரும் சிறந்த கூட்டுறவாளருமாகிய அமரர் சிதம்பரப்பிள்ளை ஆசிரியரின் மறைவு கூட்டுறவுச் சமூகத்திற்கு ஒரு பேரிழப்பாகும். தான் நினைத்ததை விடாப்பிடியாக சாதிக்கும் பண்பு கொண்டவர். இதனால் பலரின் விமர்சனத்திற்கும் ஆளானவர்.

கட்டைவேலி, நெல்லியடி பலநோக் குக் கூட்டுறவுச் சங்கம் பற்றிக் கதைக்கப் படும் போதெல்லாம் அமரரின் பெயரும் வெகுவாக அடிபடுவதை நான் அறிந்திருந்தேன். எனினும் அமரர் சிதம்பரப் பிள்ளை ஆசிரியர் அவர்களை முதன்முதலாக 1997ஆம் ஆண்டு நான் யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவி ஏற்ற பின்னரே நேரில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

முதல் சந்திப்பிலேயே அவரது அளவான, ஆணித்தரமான பேச்சும், சமூகம் சார்ந்த கரிசனையும், மேலதிகாரிகளை மதிக்கும் பண்பும், தான் நினைத்ததை சமயோசிதமாகக் கதைத்து மற்றவர்களை ஏற்றுக்கொள்ள வைக்கும் பாங்கும் எனக்கு மிகவும் பிடித்தமானவையாக அமைந்திருந்தன. தொடர்ந்து அவருடன் பழகிய உத்தியோக ரீதியிலான சந்திப்புக்களில் எல்லாம் எமது புரிந்துணர்வும் நட்பும் மேலும் வலுப்பெற்றன.சிறந்த ஆளுமையும் ஆற்றலும் கொண்ட ஒரு கூட்டுறவுத் தலைவராக என்னால் இனங் காணப்பட்டார்.

கூட்டுறவு நிறுவனங்கள் குறிப்பாக பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் வெறுமனே உணவு விநியோகத்தையே தமது பணியெனக் கொண்டு தம்மை மட்டுப் படுத்திக் கொண்டபோதும், இதுமட்டுமல்ல இன்னும் பல சமூகம் சார்ந்த பொறுப்புக்களும் கடமைகளும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு உண்டு என்பதைத் தனது செயலாற்றல் மூலம் உணர்த்திய உண்மையான கூட்டுறவாளராக விளங்கினார். சட்டங்களும் கட்டுப்பாடுகளும் மனிதர்களையும் நிறுவனங்களையும் வழிநடத்த வேயன்றி அவற்றில் அவர்களின் சமூகம் சார்ந்த சிறந்த செயற்பாடுகளுக்கு தடைக் கற்களாக இருப்பதற்கு அல்ல என்ற நிலையைக் கொண்டிருப்பது துணிவுடனும் விடா முயற்சியுடனும் தன் பணியாற்றிய ஒரு கூட்டுறவாளனாக விளங்கினார். பதவிக்குப் பல்வேறு அமைப்புக்களை நாடுகின்ற மனிதர்கள் மத்தியில் தன்னை நம்பித் தனது தலைமையை ஏற்றுக்கொண்ட தனது பிரதேச மக்களுக்கு முழுமையாக சேவையாற்றுவதே தனது தலையாய பணி எனக்கருதி தனது கடமை எல்லையை கட்டுவேலி, நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தை மையப்படுத்தி ஆற்றி வந்தார். அதேநேரம் மாவட்ட, மாகாண மட்டங்களின் கூட்டுறவுத்துறையில் பல்வேறு நன் முயற்சிகளுக்கும் உரிய ஆதரவை வழங்கி வந்துள்ளார். ஏறக்குறைய 39 ஆண்டுகள் (சில ஆண்டுகளைத் தவிர) தொடர்ச்சியாக மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவராக கட்டைவேலி, நெல்லியடி பலநோக் குக் கூட்டுறவுச் சங்கத்தில் தனது பணியினைத் திறம்பட மறையும் வரை அப்பணி லேயே முழுமையாக ஈடுபடுத்தி உழைத்த கூட்டுறவுப் பெருமகனாவார்.

நான் அவரைச் சந்திக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஏதாவது ஒரு புத்தகத்தைத் தந்து அதன் சாராம்சத்தையும் சொல்லி வாசிக்கச் சொல்லுவார். தன்னை நாடி வரும் எழுத்தாளர்கள், கலை இலக்கியவாதிகள், ஆதரவற்றோர், மாணவர்கள் எனப் பலருக்கும் கூட்டுறவுத்துறை மூலமான சகல உதவியையும் செய்து உதவியுள்ளார்.

ஓராண்டு காலத்திற்கு முன்னர் யாழ்.

**சே.கு.சண்முகநாதன்,**
**ஓய்வுபெற்ற கூட்டுறவு**
**அபி.உ.ஆணையாளர்,**
**வ.கி.மாகாணம்.**

வைத்தியசாலையில் சுகவீனமுற்றிருந்த போது தனது நோய்பற்றிய எவ்வித மனக் கிலேசமுமின்றி மிகவும் துணிவு டனும் தைரியத்துடனும் "யார் என்ன சொன்னாலும் நான் எனது மக்களுக்கு வேண்டிய என்னாலான சேவைகள் அனைத்தையும் செய்துள்ளேன் என்பதில் எனக்குப் பூரண திருப்தியுண்டு. எது நியதியோ அது நடக்கும்" என்று மிகவும் உறுதியாக இருந்துள்ளார்.

இளமையில் பொது உடமைவாதியாக விளங்கிய அமரர் சிதம்பரப்பிள்ளை தனது வாழ்வின் இறுதிவரை அந்தச் சிந்தனைகள் சிலவற்றை தன்னுள் வாங்கி மிக எளிமையாக வாழ்க்கையை வாழ்ந்து முழு நேரமும் மக்களுக்குச் சேவையாற்றிய ஓர் உன்னதமான கூட்டுறவுப் பெருமகனாவார். *(நன்றி: சங்கம் செய்தி)*

## விலங்குவிசர் நோய்த் தடுப்பு தினத்தை முன்னிட்டு நாய்களுக்குத் தடுப்பூசி

சண்டிலிப்பாய், செப்.5

விலங்குவிசர் நோய்த்தடுப்பு தினத்தை முன்னிட்டு மானிப்பாய், தெல்லிப்பழை ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுதோறும் நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பு மருந்து வழங்கப்படுவதுடன் கருத்தடைகளும் சத்திரசிகிச்சைகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இதுபற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையில் சுகாதாரப் பரிசோதகர் மூலம் கிராமங்கள்தோறும் கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

மானிப்பாய் வட்ட லயன்ஸ் அனுசரணையுடன் மானிப்பாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் ஆயிரத்து 111 நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பு மருந்து ஏற்றப்பட்டதுடன் 48 நாய்களுக்கு கருத்தடை ஊசியும் போடப்பட்டது.

இதேவேளை 20 நாய்களுக்கு கருத்தடை சத்திர சிகிச்சைகளும் செய்யப்பட்டது.

இதேபோல் ஒவ்வொரு சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. ஊசி, கருத்தடை ஊசி, சத்திரசிகிச்சை போன்றவற்றைச் செய்வதற்கான ஒழுங்குகளை மானிப்பாய் பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண்டு வருகின்றார்.

## நிர்வாகிகள் தெரிவு

சுழிபுரம்,செப்.5

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் தி. உதயசூரியன், உபதலைவர்கள் திருமதி அ. வேலுப்பிள்ளை, கா.சந்திரபாலன், செயலாளர் திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம், உபசெயலாளர் சி. சிவநாதன், பொருளாளர் வி. மகாதேவன் ஆகியோரும் 9 நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (204-28)

* * *

வடமராட்சி,செப்.5

புலோலி மத்தி சதாவதானி கதிரைவேற்பிள்ளை முன்பள்ளியின் புதிய நிர்வாக உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் கி.குகநாதன், உபதலைவர் யோகரட்ணம், செயலாளர் கு. பிரபாகர், உப செயலாளர் தே.வாசுதேவன், பொருளாளர் க. பத்மசாமி அத்துடன் 6 பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. (9-236)

* * *

வண்ணை, செப்.5

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் புனரமைப்பு பொதுக்கூட்டம் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் 30.08.2009 ஞாயிற்றுக் கிழமை த.பரமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது கீழ்க் கண்டோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்கள்-த.பரமலிங்கம், சிறில் நிரூசன், தலைவர்-அ.அல்பேட், உப தலைவர்- வீ.ஸ்ரீராஜ், செயலாளர்-சி.அ.சிவலிங்கம், உப செயலாளர்- நோபட்போல், பொருளாளர்-கி.இரத்தினராஜா.

நிர்வாகசபை உறுப்பினர்களாக 11 பேர் தெரிவாகினர்.

## மக்கள் முகம்

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைக்குப் புதிய பணிப்பாளர்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன கல்விச் சேவையில் கடமையாற்றிய ஆர்.கணபதிப்பிள்ளை, கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமரசிங்கவினால் தமிழ்சேவையின் புதிய பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளங்கலைப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன், இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் கல்வியியலில் பட்டப்பின்படிப்பைப் பூர்த்தி செய்து கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறையில் டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார்

கட்டுரை இலக்கியத்திலும் கவிதைத்துறையிலும் ஈடுபாடு கொண்ட ஆர்.கணபதிப்பிள்ளை மாணவர்களுக்கும் வாசகர்களுக்கும் பயன்தரும் நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவரின் ஆக்கங்கள் பல இலங்கையின் தேசிய பத்திரிகைகளில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## புத்தகசாலை

### இந்து சமய விரதங்களும் நவக்கிரக வழிபாடும்




இந்து சமய மக்களின் விரதங்களையும் அவற்றின் பலா பலன்களையும் நவக்கிரக வழிபாடுகளையும் எடுத்தியம்பும் "இந்து சமய விரதங்களும் நவக்கிரக வழிபாடும்" என்னும் நூல் வெளிவந்துள்ளது.

சைவ சமயத்தின் கடவுளுக்குரிய விரதங்களின் சிறப்புக்களையும் அவற்றின் மகிமைகளையும் மாதவிரதங்களின் சிறப்புக்கள் மற்றும் இல்லற வாழ்வில் திருமுறைகள் எனப்பல்வேறு சைவம் சார் அம்சங்களுடன் இந்நூல் வெளிவந்துள்ளது.

இந்நூல் சோதிடர் இ.வெங்கடேச ஐயரால் எழுதப்பட்டு அம்பலவாணர் சிற்சபேசலிங்கத்தினால் தொகுக்கப்பட்டு கொக்குவில் சோதிடப் பிரகாச யந்திரசாலையினரால் பதிப்பிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். சைவமக்கள் படித்துப் பயன்பெறக்கூடிய நூலாகும்.

### சுகமஞ்சரி




யாழ்.பல்கலைக்கழக சமுதாய மருத்துவத் துறையின் தயாரிப்பில் சுகாதாரம், கல்வி மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் வெளியீடான காலான இதழ் 'சுகமஞ்சரி' வெளிவந்துள்ளது.

துறைசார் வைத்தியர்களால் எழுதப்பட்ட சுகநலம் சார்பான கட்டுரைகளையும், மருத்துவம் சம்பந்தமான கேள்வி பதில்களையும் தன்னகத்தே தாங்கிய வண்ணம் 'சுகமஞ்சரி' வெளிவந்துள்ளது.

குழந்தை மருத்துவம், உளநலமருத்துவம், தொற்றுநோய்களைக் கட்டுப் படுத்தும்விதம், போசாக்குணவுகளைத் தயாரிக்கும் விதம் எனப் பல்வேறு சுகநலம்சார் விடயங்களுடன் 'சுகமஞ்சரி' வெளிவந்துள்ளது.

### அருள் மணம் கமழும் திருமணச் சிறப்புகள்



அருள் மணக்கும் கமழும் திருமணச் சிறப்புகள் எனும் நூல் நீர்வை மணி என்பவரால் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளது.

இல்லற வாழ்வில் இரு மனங்களை இணைப்பதற்காக சைவப் பாரம்பரிய முறையில் நடத்தப்பட வேண்டிய திருமணக்கிரியை தொடர்பான விளக்கங்களை மிகவும் தெளிவான முறையில் தொகுப்பாசிரியர் தொகுத்துள்ளார்.

எமது பாரம்பரியங்கள் நாகரீக வளர்ச்சியில் மாறுவடிவம் பெற்று வருகின்ற இந்த அவசர யுகத்தில் எது வந்தபோதும் எமது பாரம்பரியங்களின் வடிவங்கள் மாறுபடவும், அருகிவிடவும் கூடாது என்ற உயரிய நோக்கில் சைவசமயத்தின் பூர்வக்கிரியைகளில் ஒன்றான திரும ணக்கிரியை தொடர்பான விளக்கங்களை காலத்தின் தேவையறிந்து வெளியிட் டுள்ளமை பாராட்டத்தக்கதொன்றாகும்.

இந்நூல் நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத் திறப்பு விழாவின் சிறப்பு வெளியீடு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### முறை செய்யும் முறைமையில் முப்பது ஆண்டுகள்



30 வருடகாலம் நீதித்துறையில் அப்பழுக்கற்ற சேவைபுரிந்தவரான குடியியல் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி மேதகு ஜெரமையா விஸ்வநாதனின் சேவைகளைப் பாராட்டி வெளியிடப்பட்டுள்ள "முறை செய்யும் முறைமையில் 30 ஆண் டுகள்" (Justice Unbowed- Three Decades) என்ற நூல் கிடைக்கப்பெற்றோம்.

நீதிபதி ஜெரமையா விஸ்வநாதனின் சேவைகளைப் பாராட்டியும் விரித்துரைத்தும் நீதித்துறை அறிஞர்களும் வேறு பிரமுகர்களும் எழுதியுள்ள கட்டுரைகள் மட்டும் இன்றி சட்டத்துறை தொடர்பான பொதுக் கட்டுரைகளும் நூலில் இடம் பெற்றுள்ளன.

நீதிபதி ஜெ.விஸ்வநாதன் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளைக் குறிக்கும் புகைப்படங்களும் அவரது பெற்றோர் மற்றும் மாமன், மாமி படங்களும் பின் இணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

மிக உயர்ந்த தரத்திலான கடதாசியில் பல வண்ண முகப்புடன் அழகாக அச்சுப்பதிவாகி வந்துள்ள இந்நூலில் பலரும் படித்து அறிய வேண்டிய பல கட்டுரைகள் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

வவுனியா மில் வீதியில் உள்ள ஸ்ரீ ஆதவன் அச்சகத்தினரால் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. இந்நூலின் நோக்கம் பற்றி குறிப்பிடுகையில் வெளியிட்டாளர் கள் பின்வருமாறு தெரிவித்துள்ளனர்.

தமிழ், முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் அசாதாரண சூழ்நிலையில், போர்ச் சூழலில் நிதானம் தவறாது நீதியை நிலைநாட்ட பாடுபட்ட ஒருவரது ஆற்றல் அடையாளம் தெரியாது போகக் கூடாது என்ற எண்ணத்தில் வழக்குரைத்த சட்டத்தரணிகளான நாம் அவரது தூயபணியைப் பாராட்ட எடுத்த முயற்சி இது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்பள்ளி ஆசிரியர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,செப்.5

நல்லூர்க் கோட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் உப அலுவலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு நல்லூர்க் கோட்ட ஆரம்பப் பிள்ளை அபிவிருத்திக் கல்விப் பிரிவு இணைப்பாளர் திருமதி மாலதி விவேகானந்தன் கேட்டுள்ளார்.

(203)

உ
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம:
அன்னை காளியம்பாள் திருத்தாள் போற்றி
யாழ் - திருவண்ணை - கன்னாதிட்டி
அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தானம்
கேதார கௌரி விரதம்

கௌரி விரதம் அனுஷ்டிக்கும் அடியார்களே!
நிகழும் விரோதி வருடம் புரட்டாதித் திங்கள் 12 ஆம் நாள் (28.09.2009) திங்கட்கிழமை விஜயதசமி அன்று ஆரம்பமாகவிருக்கும் கேதார கௌரி விரதத்தை முன்னிட்டு 04.09.2009 வெள்ளிக்கிழமை முதல் கௌரி காப்புக்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் முன்கூட்டியே விரதகாரர்கள் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.
- தேவஸ்தான ஆதீனகர்த்தாக்கள் -
(88549)

## யோகாசன வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.5

கந்தர்மடம், குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்த மட தியான மண்டபத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6மணிக்கு யோகாசன புதிய வகுப்புகள் ஆரம்பமாகவுள்ளன.

பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்புவோரை அன்றையதினம் வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (203)

## அரையிறுதி ஆட்டங்கள்

வலி.வடக்கு,செப்.5

ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஏழுபேர் கொண்ட லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இன்று மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* பிற்பகல் 3.30 மணிக்கு நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் இளவாலை யங்கென்றீஸ் விளையாட்டுக் கழகம்.
* மாலை 4.30 மணிக்கு நாவாந்துறை சென்.நீக்கலஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.(201)

## சயன்ஸ் அக்கடமியின் கௌரவிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.5

யாழ்.சயன்ஸ் அக்கடமியின் ஏற்பாட்டில் 2008 ஆம் ஆண்டுவரை ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் உயர்வான பெறுபேறுகளைப் பெற்ற 50 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் தரம் 4 தொடக்கம் தரம் 11 வரையான பொதுப் பரீட்சைகளில்சிறப்பானபெறுபேற்றைப் பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

அரியாலை சயன்ஸ் அக்கடமியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இந்த நிகழ்வுநடைபெறும். நிகழ்வில் சாவகச்சேரி வர்த்தக வங்கியின் முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

நல்லூர் சயன்ஸ் அக்கடமியில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (204)

## கற்பித்தல் பயிலமர்வு

பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித் திட்டம் 2009/2010 ஆம் ஆண்டுக்கான கற்பித்தல் பயிற்சி மேற்பார்வைக்கான உதவியாளர் மற்றும் முதன்மை ஆசிரியர்களுக்கான பயிலமர்வு இன்று சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் 12.30 மணி வரை இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலைய விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வு இலங்கை திறந்த பல்கலைக் கழக கல்வியிற் துறை விரிவுரையாளர்களால் நடத்தப்படவுள்ளதாகப் பிராந்திய நிலைய இணைப்பாளர் அறிவித் துள்ளார். (201)

## முன்பள்ளி கற்கை நெறிக்கான பதிவுகள் இன்று இடம்பெறும்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும் முன்பள்ளி கற்கை நெறிக்கான பதிவுகள் மற்றும் மீள் பதிவுகள் இன்று சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் பிராந்திய நிலையத்தில் நடைபெறவுள்ளதாகப் பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். மேற்படி கற்கை நெறிக்கான பதிவிற்காக புதிய மாணவர்களையும் கடந்த ஆண்டு கற்கை நெறியைப் பயின்று கொண்டிருக்கும் மாணவர்களையும் தவறாது பதிவினை மேற்கொள்ளுமாறு இணைப்பாளர் கேட்டுள்ளார். இதேவேளை குறிப்பிட்ட திகதியில் மட்டுமே பதிவுகள் நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (201)

### கண்ணீர் அஞ்சலி



யாழ்.போதனா வைத்தியசாலையில் முதிராக் குழந்தைகள் பராமரிப்பு விடுதி (PBU) யில் கடமை புரியும் தாதிய உத்தியோகத்தரான திருமதி தனுஜா சுரேஸ் அவர்களின் அன்புக் கணவர்

கந்தசாமி சுரேஸ்

அவர்களின் மறைவால் துயரடைந்துள்ள அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(88547) 2001 A பிரிவு தாதிய உத்தியோகத்தர்கள்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 22 ★ 11 ★ 1934




இறப்பு 17 ★ 08 ★ 2008

அமரர் மகேஸ்வரி சிவபுண்ணியம்பிள்ளை

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்புகாட்டி
அரவணைத்த என் அன்புத் தெய்வமே
ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள்
நினைவுகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு என்றும் நீங்காது

இணுவில் மேற்கு,
இணுவில்.
குடும்பத்தினர்
கு.தியாகராசா
(சி/560745)

### கண்ணீர்க் காணிக்கை



எமது ஆருயிர் நண்பர்கள்
பொபி, அகில்
ஆகியோரின் அன்புத் தந்தை
அமரர்
டேவிற் அலெக்சாண்டர்

அவர்களுக்கு எமது கண்ணீரைக் காணிக்கையாக்குவதோடு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நின் மறைவின் செய்தி கேட்டு
எம் இதயம் கனக்கிறது
ஈன்றெடுத்த பிள்ளைகள் போல்
எம்மை நீ அரவணைத்தாய்
அரவணைத்த கரங்கள் இங்கு
அசைவற்றுக் கிடக்கிறதே
உன் நினைவு ஒரு போதும்
எமை விட்டு நீங்காது
நின் ஆன்மா அமைதிபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

புனித மரியன்னை பேராலயம்,
யாழ்ப்பாணம்.

என்றும் மறவா
முன்னாள் பீடப்
பணியாளர்கள்.

### கண்ணீர் அஞ்சலி




இளைஞர் உருவாக்கல் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களான
பொபி, அகில்
ஆகியோரின் அன்புத் தந்தையான
அமரர் டேவிட் அலெக்சாண்டர்
(உரிமையாளர், லொயலாஸ் )

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயர் அடைந்தோம். இவரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் இவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இளைஞர் உருவாக்கல் இயக்கம்,
புனித மரியன்னை பேராலயம், யாழ்ப்பாணம்.
(88532)

### 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 27 ★ 04 ★ 1968



மறைவு 23 ★ 07 ★ 2009

அமரர் இராசையா திருச்செல்வம்
(7ஆம் வட்டாரம், புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் சுவிஸ்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்டவர்)

எல்லா நினைவுகளும் நீயாகி
உன் உயிர் உள்ளவரை
எமக்காய் வாழ்ந்தாய்
எம் உயிர் உள்ளவரை தம்பி
உன்னை நாம் மறவோம்.

கடந்த 23.07.2009 அன்று சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரன் இராசையா திருச்செல்வத்தின் மரணச் செய்திகேட்டு எமக்கு ஆறுதல் கூறி எம் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் மேலும் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலமாக ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் எமக்கு உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று (05.09.2009) சனிக்கிழமை மதியம் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

நி.மு-7ஆம் வட்டாரம், புங்குடுதீவு,
த.மு-இல 1, சினியர் லேன், யாழ்ப்பாணம்.
021 7900782
இ.கந்தசாமி
(சகோதரன்)
(88550)

### முதலாமாண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 ★ 10 ★ 1930



உதிர்வு 05 ★ 09 ★ 2008

இவ்வுலக வாழ்வை நிறைவு செய்து கொண்டு
விண்ணக பயணத்தை சென்றடைந்த

அமரர் நீக்கிலாப்பிள்ளை திரவியம்
(சிங்கராசா)

அன்பினால்அரவணைத்து ஆற்றல் வழி நடந்து
பண்பாகப்பழகி எமை பாசம் கொள்ள வைத்த தந்தையே!
புன்முறுவல் பூத்த உங்கள் முகம்- எம் முன்னே நிழலாட
நம் கண்கள் குளமாகிட - காலனடி சேர்ந்ததேனோ?
வேடிக்கையாகப் பேசி எம்மை கவர்ந்து இழுத்த
கள்ளங்கபடமற்ற கனிவான உங்கள் பார்வையை
அள்ளி அள்ளித் தந்து ஆசை தீரக் கொடுத்துதவும்
வள்ளலே நீங்கள் என்றும் வாழ்வீர்கள் எம் மனங்களிலே
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கூழாவடி மேற்கு,
ஆனைக்கோட்டை.
(88543)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்களால் கடத்தப்பட்ட இரு எரிபொருள் தாங்கிகள் மீது நேட்டோ படைகள் விமானத் தாக்குதல்; 90 பேர் உயிரிழப்பு!

காபூல், செப். 05

வட ஆப்கானிஸ்தானில் தலிபான்களால் கடத்தப்பட்ட இரு எரிபொருள் தாங்கிகள் மீது நேட்டோ படைகள் விமானத் தாக்குதலை மேற்கொண்டன. இதில் 40 சிவிலியன்கள் உட்பட 90 பேர் கொல்லப்பட்டனர். அநேகர் எரிகாயங்களுக்குள்ளாயினர் என நேற்று வெள்ளிக்கிழமை ஆப்கான் அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

குண்டூஸ் மாகாணத்திலுள்ள ஒமர் ஹெல் என்னும் கிராமத்துக்கருகில் வியாழக்கிழமை நள்ளிரவு இந்த இரு எரிபொருள் தாங்கிகளும் தலிபான் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டன. இந்த தாங்கிகள் நேட்டோ படைகளுக்கு எரிபொருள் விநியோகித்து வந்தவை என்றும் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

தலிபான் தீவிரவாதிகள் தங்களால் கடத்தப்பட்ட இந்த இரு எரிபொருள் தாங்கிகளையும் ஆற்றுக் கடவைக்கருகில் நிறுத்தினார்கள். அச்சமயம் நேட்டோ படைகள் தாங்கிகள் மீத விமானத் தாக்குதலை மேற்கொண்டன. இதனால் தாங்கிகள் வெடித்து பயங்கரமாக தீ பரவியுள்ளது என பிரதம பொலிஸ் அதிகாரி குலாம் மொஹியுதீன் ஏ.பி. செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

இந்தக் கடவைக்கருகில் தலிபான்கள் எரிபொருள் விநியோகத்தில் ஈடுபட்டார்கள். இதைக் கொள்வனவு செய்ய கிராமமக் கள் வந்து திரண்டார்கள். இச்சமயத்தில் தாங்கிகள் குண்டுத் தாக்குதல்களுக்கு இலக்காகின என நேரில் கண்ட கிராமவாசிகள் தெரிவித்தார்கள்.

குண்டுத் தாக்குதல்களில் தாங்கிகள் சிதறி அதி வேகமாகப் பரவிய தீக்குள் சிக்கியே 90 பேர் மரணித்துள்ளனர். இவர்களில் எரிபொருள் கொள்வனவு செய்ய வந்திருந்த 40 சிவிலியன்களும் அடங்குவர் என பொலிஸ் அதிகாரியொருவர் குறிப்பிட்டார். அவர் தம்மை அடையாளப்படுத்திக்கொள்ள முன்வரவில்லை.

எரிபொருள் தாங்கிகள் சிதறி பற்றிப் பரவிய தீக்கு, குண்டூஸ் மாவட்டங்களைச் சேர்ந்த அநேக தலிபான்கள் பலியானார்கள். அவர்களில் தலிபான் கொமாண்டர் அப் துர் ரஹ்மான், அநேக சிரேஷ்ட தலிபான்கள், நான்கு செச்னிய போராளிகள் ஆகியோரும் அடங்குவர் என குண்டூஸ் மாகாண ஆளுநர் மொஹம்மத் ஒமர் தெரிவித்தார்.

# ஜக்ஸனின் உடல் அடக்கம்



லொஸ் ஏஞ்சல்ஸ், செப். 05

மறைந்த பொப் இசை மன்னர் மைக்கல் ஜக்ஸனின் உடல் அவர் இறந்து 10 வாரங்களுக்குப் பின்னர் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. உலகை தனது பொப் இசையால் கவர்ந்த மைக்கல் ஜக்ஸன், கடந்த ஜூன் மாதம் 25 ஆம் திகதி தனது 50 ஆவது வயதில் திடீரென மறைந்தார்.

அவரது உடலை எங்கு அடக்கம் செய்வது என்பதில் அவரது குடும்பத்தினருக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக அவரது உடல் அடக்கம் செய்யப்படாமல் கடந்த 10 வாரங்களாக வைக்கப்பட்டிருந்தது. தற்போது லொஸ் ஏஞ்சல்ஸ் நகரிலுள்ள கிளான்டேல் வனத்தின் புல்வெளியிலுள்ள நினைவுப் பூங்காவில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது.

உடல் அடக்க நிகழ்ச்சியில் ஊடகங்கள் அனுமதிக்கப்படவில்லை. மைக்கல் ஜக்ஸனின் தாயார் கேத்தரின், தந்தை ஜோ, அவரது சகோதரர்கள், ஜக்ஸனின் குழந் தைகள் பிரின்ஸ் மைக்கல், பாரீஸ், பிரின்ஸ் மைக்கல் - 2 ஆகியோரும், நெருங்கிய நண்பர் களும் கலந்துகொண்டனர்.

அவர்களில் பிரபல நடிகை எலிசபெத் டெய்லர், மெக்காலே கல்கின், ஜக்ஸனின் காதலி மிலா குனிஸ், நடிகர் கிறிஸ் டக்கர் ஆகியோர் அடங்குவர். இதற்கு முன்னர் ஸ்டேபிள்ஸ் மையத்தில் ஏராளமானோர் கலந்துகொண்ட பிரார்த்தனை நடைபெற்றது.

## பாகிஸ்தானில் கிறிஸ்தவர்கள் பீதி; தேவாலய பேரவை முறைப்பாடு

பாகிஸ்தானில் கிறிஸ்தவர்களும், இதர மதங்களைச் சேர்ந்த சிறுபான்மையினரும், பீதியுடன் வசித்து வருகிறார்கள் என உலக கிறிஸ்தவ தேவாலயங்களின் பேரவை தெரிவித்துள்ளது.

110 நாடுகளிலுள்ள புரட்டஸ்தாந்து, ஆர்த்த டக்ஸ் தேவாலயங்களின் உலகப் பேரவையாகுமிது. இப்பேரவை, பாகிஸ்தானில் வசிக்கும் கிறிஸ்தவர்களின் நிலைப்பாடு தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. பாகிஸ்தானில் மதச் சிறுபான்மை நபர்கள் மீது விரோதம் ஏற்பட்டால், உடனடியாக அவர்கள் இஸ்லாத்தை அவமானப்படுத்திவிட்டார்கள் என வீண் பழி சுமத்தப்பட்டு, தண்டனைக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த அபாண்டமான குற்றச்சாட்டின் பேரில், தங்களுக்கு மரணதண்டனை விதிக்கப்படலாம். இல்லையேல், தாங்கள் அடித்துக் கொல்லப்படலாம் என இந்த சிறுபான்மையினர் அஞ்சுகின்றனர். அத்துடன் நிம்மதியிழந்தும் காணப்படுகின்றனர் என்றும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தனிப்பட்ட குரோத, விரோதத்துக்காக -பிறரை பழிவாங்குவதற்காக இந்த யுக்தியே கையாளப்பட்டு வருகிறது. எனவே, இதற்கு ஏதுவான மதத்தை அவமானப்படுத்தும் குற்றத்துக்கு மரணதண்டனை விதிப்பதற்கான சட்டம் பாகிஸ்தானில் மாற்றப்படவேண்டும் என்றும் அவ்வறிக்கையில் கோரப்பட்டுள்ளது.

# இந்தியா மீண்டும் அணுகுண்டு பரிசோதனை நடத்தத் திட்டமாம்

## பாக். வெளியுறவுத்துறை அதிகாரி தகவல்

இஸ்லாமாபாத், செப். 05

''இந்தியா மீண்டும் அணுகுண்டு சோதனை நடத்தத் திட்டமிட்டுள்ளது என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இது எமக்கு கவலை அளிக்கிறது. எனினும், இதுபோன்று தன்னிச்சையாக அணுகுண்டு சோதனை நடத்தப்படுவது தொடர்கதையாக உள்ளது. உலக நாடுகள் இச் செயற்பாட்டைக் கவனத்தில் கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு'' என பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் அப்துல் பாசித் பேட்டியொன்றில் தெரிவித்தார்.

அப்துல் பாசித் இஸ்லாமாபாத்தில் வார இதழ் ஒன்றுக்கு இப்பேட்டியை அளித்தார்.

அப்போது, பாகிஸ்தான் அணுஆயுதத்தை குவிக்கும் செயலில் தொடர்ந்து மும்முரமாக ஈடுபட்டுவருகிறது என இந் திய இராணுவ தலைமைத் தளபதி தீபக் கபூர் சமீபத்தில் கூறியுள்ளமை தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளிக்கையில் அப்துல் பாசித் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

''அணுஆயுதத்தை குவித்து பிற நாடுகளை அச்சுறுத்தவேண்டும் என்ற எண்ணம் பாகிஸ்தானுக்குக் கிடையாது. தற்பாதுகாப்பு நோக்குடன் மட்டுமே தேவையான ஆயுதத்தை பிற நாடுகளிடமிருந்து வாங்குகிறோம். இந்த விடயத்தில் பாகிஸ் தான் எல்லைமீறி நடந்துகொள்ளவில்லை. உரிய கட்டுப்பாட்டையும், வரம்பையும் பின்பற்றி வருகிறோம்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''தெற்கு ஆசிய பிராந்தியத்தில் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதில் நாடுகளுக்கிடையே கடும் போட்டி நிலவுகிறது. இப் போட்டியை பாகிஸ்தான் கடுமையாக எதிர்த்து வருகிறது. இதை யாரும் மறுக்க முடியாது'' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

''பிராந்தியத்தில் தன்னிச்சையாக அணுகுண்டு சோதனை நடத்துவதை கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் அவசியம். அணு ஆயுத பரவலும் தடுக்கப்படவேண்டும். இவ்விடயங்களில் பாகிஸ்தான் தொடர்ந்து ஆர்வமாக உள்ளது. இதுகுறித்து உரிய பரிந்துரையையும் செய்து வருகிறது. இந்த பரிந்துரைகள் இதுவரை செயல்வடிவம் பெறவில்லை'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

அணுஆயுத பரவலைத் தடுப்பது சம்பந்தமான ஐ.நா. சார்பிலான பேச்சுகளுக்கு பாகிஸ்தான் முட்டுக்கட்டையாக உள்ளது என முறைப்பாடு எழுகிறதே என பிறிதொரு கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கவர் பதிலளிக்கையில், ''இது முற்றிலும் தவறான தகவல். அணுஆயுத பரவலைத் தடுப்பது குறித்து பேச்சு தொடங்குவதில் பாகிஸ்தான் நெகிழ்வுடன் நடந்துகொள்கிறது. அதேசமயம் உள்நாட்டு பாதுகாப்பு விடயத்தில் எவ்வித சமரசத்துக்கும் இடமளிக்கக்கூடாது என்பதில் உறுதியாக நாம் உள்ளோம்'' என்றார்.

# பொதுநலவாய அமைப்பிலிருந்து பிஜி நீக்கம்; பிரிட்டன் அறிவிப்பு

வெலிங்டன், செப். 05

பிஜியின் சர்வாதிகார அரசு தேர்தல் நடத்த முயற்சி மேற்கொள்ளாததை அடுத்து அந்நாடு பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது என பிரிட்டன் அறிவித்துள்ளது.

பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்திலிருந்த நாடுகளை உள்ளடக்கிய அமைப்பு பொதுநலவாய அமைப்பாகும். இதில் பிஜி எனப்படும் குட்டி தீவு நாடும் ஒன்று.

2006 ஆம் ஆண்டு பிஜியில் ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்பட்ட அரசு கலைக்கப்பட்டு, இராணுவ ஆட்சி கொண்டு வரப்பட்டது. மேலும் இராணுவம் வாரிக் பிராங்க் பெய்னிமராமா என்பவரை இடைக் கால பிரதமராக அறிவித்து, ஆட்சி செய்து வருகிறது.

அங்கு 2010 ஆம் ஆண்டுக்குள் தேர்தல் நடக்கவேண்டும். அதற்கான திகதியை பிஜி இராணுவ அரசு விரைவில் அறிவிக்க வேண்டும் என பொதுநலவாய அமைப்பு கூறியது. ஆனால், இதை இடைக்கால பிரதமர் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் அவர் சமீபத்தில் 2014 இல் தேர்தல் நடத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, பிஜியை பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. இது குறித்த அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கமலேஷ் சர்மா கூறுகையில், ''இது மிகவும் வருத்தமான ஒன்றுதான். ஆனாலும் அங்கு ஜனநாயகத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதற்காக இந்த முடிவை எடுத்துள்ளோம்'' என்றார்.

இதைத் தொடர்ந்து பிஜி தீவுக்கு பொதுநலவாய அமைப்பு நாடுகள் செய்துவந்த அனைத்து தொழில்நுட்ப உதவிகளும் நிறுத்தப்பட்டன. மேலும் பிஜி தீவு அடுத்த ஆண்டு டில்லியில் நடக்கவிருக்கும் பொதுநலவாய போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பையும் இழந்துள்ளது.

பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட இரண்டாவது நாடு பிஜி. முன்னர் நைஜீரியா கடந்த 1995 ஆம் ஆண்டு இந்த அமைப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# பாகிஸ்தான் அணு விஞ்ஞானியிடம் அல்-குவைதா உதவி கோரியது

## அமெ. பாதுகாப்பு ஆராய்ச்சிக் குழு தகவல்

இஸ்லாமாபாத், செப். 05

பாகிஸ்தான் அணு விஞ்ஞானி ஏ.கியூ. கான் குழுவினருடன் தொடர்பை ஏற்படுத்தி, அவர்களிடமிருந்து அணு ஆயுதம் தயாரிப்பதற்கான உதவிகளைப் பெறுவதற்காக அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன், தமது தூதர்களை அனுப்பியிருந்தார் என அமெரிக்க நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு ஆராய்ச்சிக் குழு தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் பாதுகாப்பு குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் கவலைகள் குறித்து ஆய்வு செய்து, அவற்றின் உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்காக அமைக்கப்பட்டுள்ள சுயேச்சையான அமைப்பே சிஆர்எஸ். அமைப்பாகும்.

இந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு பின்லேடன், தமது தூதர்களை அனுப்பி விஞ்ஞானி கானுடனும் அவரது குழுவினருடனும் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முயன்றார் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேசமயம், பாகிஸ்தான் அரசு தரப்பிலிருந்தும் தீவிரவாதிகளுக்கு அணு பொருள்கள் வழங்கப்பட்டிருக்கலாம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆதிக்க நாடுகளின் அச்சுறுத்தலுக்கு ஒருபோதும் அடிபணிய மாட்டோம்

## ஈரான் வெளியுறவு அமைச்சக அதிகாரி தெரிவிப்பு

தெஹ்ரான், செப். 05

''ஈரான் மேற்கொண்டுள்ள அணுசக்தி திட்டங்கள் தொடர்பான பேச்சுகளுக்கு காலக்கெடு விதித்து, உலக ஆதிக்க நாடுகள் விடுக்கும் அச்சுறுத்தல், நிர்ப்பந்தத்துக்கு நாம் அடிபணியப் போவதில்லை'' என ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹஸன் ஹஸ்காவி தெரிவித்துள்ளார். ஈரானின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான 'இர்னா' வியாழக்கிழமை இதைத் தெரிவித்துள்ளது.

''எந்தப் பிரச்சினையாலும் பேச்சுகள் நடத்தவும், ஒருங்கிணைந்து செயற்படவும் ஈரான் தயாராக உள்ளது. ஆனால், இந்த விடயத்தில் காலக்கெடு விதித்து, ஆதிக்க மனப்பான்மை கொண்ட 6 உலக நாடுகள் விடுக்கும் அச்சுறுத்தல், நிர்ப்பந்தம் ஆகியவற்றுக்கு நாங்கள் ஒருபோதும் அடிபணியமாட்டோம்'' என்றும் ஹஸன் ஹஸ்காவி தெரிவித்துள்ளார்.

ஐ.நா. பிரதிநிதிகள் முன்னிலையில் இந்த மாதப் பிற்பகுதியில் நேருக்கு நேரான பேச்சுகளில் பங்கேற்க ஈரான் ஒப்புக்கொள்ளவேண்டும் என அமெரிக்கா, பிரிட்டன், சீனா, ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய 6 நாடுகள் [illegible] யுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்குப் பதில் அளிக்கும் வகையில் ஈரான் வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் இக் கருத்தைத் வெளியிட்டுள்ளார்.

''ஈரானின் அணுசக்தித் திட்டங்கள் குறித்து சர்வதேச அணுசக்தி முகமை மட்டுமே ஆராயவேண்டும். ஐ.நா. பாதுகாப்புச் சபை இதில் தலையிடக்கூடாது. சர்வதேச விதிமுறைகளுக்கு உட்பட்டு தனது அணுசக்தித் திட்டங்களை ஈரான் தொடர்ந்து மேற்கொள்ளும்'' என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆந்திராவின் அடுத்த முதல்வர் யார்? ரெட்டியின் மகனுக்கே அதிக வாய்ப்பு

## தற்காலிக முதல்வராக ரோசய்யா பதவியேற்பு



டில்லி, செப். 05

ஆந்திர மாநிலத்தின் புதிய முதல்வர் அடுத்த வாரம் தேர்வு செய்யப்படுகிறார். ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகனுக்கே அதிக வாய்ப்பு உள்ளது என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ராஜசேகரரெட்டி ஹெலி விபத்தில் மரணம் அடைந்ததைத்தொடர்ந்து, அந்த மாநிலத்தின் தற்காலிக முதல்வராக, மூத்த காங்கிரஸ் தலைவரான ரோசய்யா நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார்.' நிதி அமைச்சரன ரோசய்யா, ராஜசேகர ரெட்டியின் அமைச்சரவையில் 2ஆவது இடத்தில் இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றுமுன்தினம் மாலை ஹைதராபாத்தில் உள்ள ஆளுநர் மாளிகையில் ஆந்திராவின் தற்காலிக முதல்வராக ரோசய்யா பதவியேற்றுக் கொண்டார். ஆந்திரப் பிரதேச மாநில காங்கிரஸ் கட்சிப் பொறுப்பாளர் வீரப்பமொய்லி கூறுகையில்-

ரோசய்யா பதவியேற்றிருப்பது ஒரு இடைக்கால ஏற்பாடுதான் - என்றார்.

ராஜசேகர ரெட்டியின் மறைவுக்கு, ஆந்திர மாநில சட்டசபை காங்கிரஸ் கட்சி அனுதாபம் தெரிவித்திருக்கிறது. இது தொடர்பாக அனுதாப தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.



தற்காலிக முதல்வராகப் பதவியேற்றுள்ள 77 வயது ரோசய்யா, எந்த பிரச்சினையிலும் சிக்காத மூத்த தலைவர். சென்னா ரெட்டி, அஞ்சய்யா, விஜயபாஸ்கர ரெட்டி, ஜனார்த்தன ரெட்டி ஆகியோரது அமைச்சரவையிலும் அமைச்சர் பதவி வகித்துள்ளார். ஆந்திர மாநில சட்டசபையில் 15 தடவை பட்ஜெட் தாக்கல் செய்து சாதனை படைத்தும் இருக்கிறார்.

இந்த நிலையில், எம்.எல்.ஏக்களின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி அடுத்த முதல்வரைத் தேர்வு செய்வதில் காங்கிரஸ் கட்சியின் மேலிடம் ஆர்வம் காட்ட விரும்பவில்லை. ராஜசேகர ரெட்டி இறந்த சோகம் சற்றுத் தணியட்டும் என்று கருதுகிறது.

எனவே, அடுத்த முதல்வரைத் தேர்வு செய்வது அடுத்த வாரம் நடைபெறும். அநேகமாக எதிர்வரும் திங்கட்கிழமை புதிய முதல்வர் தேர்வு செய்யப்படுவார் என்று தெரிகிறது.

இதனிடையே, அடுத்த முதல்வர் யார் என்ற விவாதம் கட்சிக்குள் இப்போதே தொடங்கி விட்டது. இதற்கான பரிசீலனை பட்டியலில் 6 பேரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. இந்தப் பட்டியலில் ராஜசேகர ரெட்டியின் மகன் வை.எஸ்.ஜெகன் மோகன் ரெட்டியின் பெயரும் இடம்பிடித்துள்ளது.

நேற்றுமுன்தினம் ரோசய்யா கூட்டிய அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற மந்திரிகளில் 10 பேர் ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன் மோகனையே அடுத்த முதல்வராகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

எனவே, ஜெகன் மோகன் ரெட்டிக்கு அதிக வாய்ப்பிருக்கிறது எனக் கூறப்படுகிறது. அனுதாபத்தின் அடிப்படையிலும், ரெட்டியின் ஆதரவாளர்களை சமாதானப் படுத்தும் விதமாகவும் ஜெகன் மோகன் ரெட்டிக்கே முதல்வர் வாய்ப்பு வழங்கப் படலாம் எனக் கூறப்படுகிறது.

# இதயம் துடித்துக் கொண்டேயிருக்கும்

## முதல்வர் ரெட்டி கடைசியாக அளித்த பேட்டி

ஐதராபாத், செப். 05

''கிராமங்களுக்கு முன் அறிவிப்பு இன்றி திடீரெனச் சென்று வறட்சி நிவாரண நடவடிக்கைகள் சரியாக நடக்கின்றனவா என்பதை ஆய்வு செய்ய விரும்புகிறேன்.''

''எனக்கு கிராம மக்கள் மற்றும் பெண்களின் முன்னேற்றம்தான் முக்கியம். அவர்களுக்காக என் இதயம் துடித்துக் கொண்டே இருக்கும்.''

இவைதான் ஹெலி விபத்தில் பலியான ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி கடைசியாக பேசிய வார்த்தைகள்.

அவரது கடைசிப் பேட்டி வருமாறு -

வறட்சி, வேலையில்லா திண்டாட்டம் போன்ற பிரச்சினைகளுக்கு நிவாரணம் அளிக்கும் அரசின் திட்டங்கள் முறையாக செயற்படுத்தப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன். இதற்காக ஒவ்வொரு மாதமும் 2 அல்லது 3 கிராமங்களுக்கு முன் அறிவிப்பு இன்றி திடீர், திடீர் என்று செல்வேன். எனக்கு கிராம மக்கள் மற்றும் பெண்களின் முன்னேற்றம் தான் முக்கியம். அவர்களுக்காக என் இதயம் துடித்துக் கொண்டே இருக்கும். - என்றார்.




சத்தியமூர்த்தி பவனில் மறைந்த ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியின் படத்துக்கு மாநிலக் காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, சட்டசபைக் காங்கிரஸ் தலைவர் சுதர்சனம் ஆகியோர் அஞ்சலி செலுத்தியபோது....

# ரெட்டியின் உடல் நேற்று அடக்கம்; மன்மோகன் சிங், சோனியா அஞ்சலி



ஹைதராபாத்,செப்.05

ஹெலிகொப்டர் விபத்தில் மரணமடைந்த ஆந்திர முதலமைச்சர் ராஜசேகர ரெட்டியின் இறுதிச்சடங்கு நேற்று மாலை அவரது சொந்த ஊரான கடப்பா மாவட்டம் புலிவெந்துலாவில் முழு அரசு மரியாதையுடன் நடைபெற்றது.

ஹைதராபாத் லால்பகதூர் விளையாட்டு மைதானத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது பூதவுடலுக்கு இலட்சக்கணக்கான மக்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

நேற்றுக் காலை பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் ஹைதராபாத் சென்று, ராஜசேகர ரெட்டியின் வீட்டில் வைக்கப்பட்டிருந்த அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். மேலும் மத்திய அமைச்சர்கள் பலரும் மரியாதை செலுத் தினர்கள்.

நல்லமலை வனப்பகுதியில் மலை உச்சியில் சிதறிக் கிடந்த ஹெலிகொப்டருக்கு இடையே ராஜசேகர ரெட்டி மற்றும் அவருடன் பயணம் செய்த 4 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டு காக்கிநாடாவுக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பப்பட்டன.

பின்னர் ராஜசேகர ரெட்டியின் உடல் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வைக்கப்பட்டு ஹைதராபாத்தில் உள்ள அவரது வீட் டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு நேற்று முன்தினமிரவு முழுவதும் அவரது உடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

ராஜசேகர ரெட்டியின் அமைச்சரவை சகாக்கள், காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், மத்திய அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர்களுடன் பொதுமக்களும் விடிய விடிய அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதனையடுத்து ராஜசேகர ரெட்டியின் உடல், மூவர்ணக் கொடி போர்த்தப்பட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திறந்த இராணுவ கவச வாகனத்தில் வைக்கப்பட்டு ஹைதராபாத்தில் உள்ள காங்கிரஸ் தலைமையகமான காந்திபவனுக்கு கொண்டு செல்லப்பட்டது.

பின்னர் அங்கிருந்து முதலமைச் சரின் உடல் ஹைதராபாத்தில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி விளையாட்டு மைதானத்திற்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

நேற்று மாலை அவரது சொந்த ஊரான கடப்பா மாவட்டம் புலிவெந்துலாவுக்கு அவரது உடல் கொண்டு செல்லப்பட்டு அங்கு 5.30 மணியளவில் இறுதிச்சடங் குகள் நடைபெற்றன என தெரிவிக் கப்பட்டது.

# மும்பையில் கனமழையால் 12 பேர் பலி; 13 பேர் காயம்!

மும்பை, செப்.05

மும்பையில் உள்ள அந்தேரி புறநகர் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பலத்த மழை பெய்தமையால் சகினாகா என்ற இடத்தில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து சுமார் 20 வீடுகள் மண்ணுக்குள் புதைந்தும் இடிந்தும் சேதம் அடைந்தன. இடிபாடுகளுக்குள் சிக்கி 12 பேர் பரிதாபமாக இறந்தனர். இவர்களில் குழந்தைகளும் அடங்குவர். மேலும் 13 பேர் காயம் அடைந்தனர்.

தகவல் அறிந்ததும் 10 தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தன. இடிபாடுகளை அகற்றி அதில் சிக்கியவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே, நிலச்சரிவில் பலியானவர்களின் குடும்பங்களுக்கு மராட்டிய அரசின் சார்பில் தலா ஒரு லட்சம் ரூபா உதவித் தொகை வழங்கப்படும் எனவும் காயம் அடைந்தவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படும் என்று மராட்டிய மாநில முதல்வர் அசோக்சவான் நேற்று அறிவித்தார்.




## ஆந்திர முதல்வரின் மரணச் செய்தி கேட்டு

# மக்கள் தற்கொலை, அதிர்ச்சிச் சாவு மொத்தம் 67 பேர் உயிர் துறந்தனர்

பெங்களூர், செப்.5

ஆந்திர முதலமைச்சர் ராஜசேகரரெட்டி ஹெலிகொப்டர் விபத்தில் மரணம் அடைந்த தகவலை அறிந்ததும் நாடே அதிர்ச்சியில் மூழ்கியது. ஆந்திர மக்கள் கதறித் துடித்தனர். எங்கு பார்த்தாலும் அழுகைச் சத்தமாக இருந்தது.

கிராமமக்கள் அனைவரும் தங்கள் வீட்டில் உடன் பிறந்த சகோதரர் இறந்துவிட்டமை போன்ற துக்கத்தில் உறைந்து போனார்கள். பெண்கள் எழுப்பிய ஒப்பாரி ஓலங்கள் மனதை பிழிவதாக இருந்தன.

தனியார் தொலைக்காட்சிகளில் ராஜசேகர ரெட்டியின் சிதைந்த உடல், ஹெலிகொப்டர் நொறுங்கிக் கிடக்கும் காட்சிகள் நேற்று அடிக்கடி ஒளிபரப்பப்பட்டன. இதைப் பார்த்த ஏராளமான மக்கள் கதறி அழுதனர். டி.வி. பார்த்துக் கொண்டிருந்த பலர் அதிர்ச்சியில் இறந்து போனார்கள். முதல்வர் இறந்த செய்தி கேட்டு மாநிலம் முழுவதும் 67 பேர் தற்கொலை செய்து கொண்டனர் என்று செய்திகள் நேற்று மாலை தெரிவித்தன.

இவர்களில் பெரும்பாலானோர் ராஜசேகர ரெட்டி கொண்டுவந்த ஆரோக்யஸ்ரீ என்ற இலவச அறுவைச் சிகிச்சைத் திட்டம், விவசாயக்கடன் தள்ளுபடி, வறுமை ஒழிப்புத் திட்டம், இலவச வீடுகட்டும் திட்டம், இளைஞர்களுக்கு சுயதொழில் தொடங்கும்திட்டம் போன்ற திட்டங்களில் பயன் பெற்றவர்கள்.

இந்தத் திட்டங்களால் ஆந்திராவில் கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் கோடிக்கணக்கான மக்கள் பயன்பெற்றனர். இதனால் தானோ என்னவோ ஆந்திராவே கடந்த 3 நாள்களாகக் கண்ணீர் கடலில் தத்தளிக்கிறது.

ராஜசேகரரெட்டி இறந்த தகவலை அறிந்ததும் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த முனிரத்தினம், ராஜாரெட்டி, பத்மாவதி, சங்கரம்மா ஆகிய 4 பேர் அதிர்ச்சியில் மரணம் அடைந்தனர்.

இவர்கள் 4 பேரும் ராஜசேகரரெட்டி கொண்டு வந்த ஆரோக்யஸ்ரீ திட்டத்தின் கீழ் தனியார் மருத்துவ மனைகளில் இலவச அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்கள்.

ஆற்றில் [illegible]

மேற்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த ஊனமுற்ற தம்பதிகளுக்கு ராஜசேகரரெட்டி கொண்டு வந்த நலத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ஓய்வூதியம் கிடைத்து வந்தது.

இந்நிலையில் முதல்வர் இறந்த தகவலைக் கேட்டதும் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்தப்படி கதறி அழுதனர். நாங்கள் தினமும் வழிபடும் தெய்வம் எங்களை விட்டுப் போய்விட்டதே, இனி இந்த உலகத்தில் எங்களுக்கு யார் உதவி செய்வார்கள் என்று கதறித் துடித்தனர்.

திடீரென இருவரும் அங்குள்ள கோதாவரி நதிக்கு சென்று கட்டிப்பிடித்தப்படி உள்ளே குதித்தனர். இதைப்பார்த்த மீனவர்கள் வேகமாகப் படகில் சென்று இருவரையும் காப்பாற்றினார்கள். பின்னர் அந்தத் தம்பதியருக்கு கிராம மக்கள் ஆறுதல் கூறி, வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

காக்கிநாடாவைச் சேர்ந்த பாபு என்பவர் ராஜசேகர ரெட்டி இறந்த துக்கத்தில் தற்கொலை செய்து கொண்டார். அவர் எழுதியிருந்த கடிதத்தில், ஆந்திர மக்களுக்காக உயிரைக் கொடுத்துள்ளார் ராஜசேகர ரெட்டி. நான் எனது உயிரை அந்த மனித தெய்வத்திற்கு அர்ப்பணிக்கிறேன் என்று உருக்கமாக எழுதி இருந்தார்.

கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் துளசிவேணி, ஸ்ரீராமுலு, ராஜு, சத்ய நாராயணா, களந்தம்மா, ராமானந்தயூரைச் சேர்ந்த யாதகிரி, ஸ்ரீனிவாஸ், மேற்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த ஷேக் முகதீம்ஜா, ராஜா, சேஷா ரத்னம் உள்பட மாநிலம் முழுவதிலும் 67 பேர் அதிர்ச்சியில் இறந்து போனார்கள்.

கிழக்கு கோதாவரி மாவட்டத்தைச் சேர்ந்த ஏசுபாபு, ராமுலு ராமகிருஷ்ணன், ஹைதராபாத்தைச் சேர்ந்த வங்கி ஊழியர் சுரேஷ்குமார் உட்பட 16 பேர் துக்கம் தாங்காமல் தற்கொலை செய்து கொண்டனர்.

ஆந்திராவில் இதுவரை எந்த அரசியல் தலைவரின் மரணத்துக்கும் இதுபோன்ற அதிர்ச்சி உயிரிழப்புகள் நடைபெறவில்லை.

பிரபல நடிகரும், முன்னாள் முதலமைச்சரு மான என்.டி.ராமாராவ் 1996ஆம் ஆண்டு இறந்தார். அப்போது கூட இந்த அளவுக்கு அதிர்ச்சி உயிர் இழப்புகள் நடைபெறவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டின் கல்விப் பிரச்சினைகள் குறித்து ஆராய 14 ஆம் திகதி யாழ். இந்துவில் நடமாடும் சேவை

## வலயங்கள் ரீதியாக இருகட்டங்களாக நடைபெறும்

அச்சுவேலி, செப்.5

யாழ்.மாவட்டத்தில் கல்வித்துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய எதிர்வரும்14 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது.

வலயங்கள் ரீதியாக எதிர்வரும் 7 ஆம் திகதி முதலும், 15 ஆம் திகதி முதலும் இரு கட்டங்களாக நடமாடும் சேவைகள் இடம்பெறவுள்ளன.

இந்த நடமாடும் சேவைகளை ஒருங்கமைக்கப்பட்ட முறையில் மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள் குழு, இரண்டு அணிகளாக யாழ்ப்பாணம் வருகின்றது.

முதலாவது குழுவினர் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தலைமையிலும் இரண்டாவது குழுவினர் வடக்கு பொதுக் கல்வி அமைச்சுச் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையிலும் வருகை தரவுள்ளனர்.

7 ஆம் திகதி வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் தலைமையில் வரும் குழுவினர் அன்று பிற்பகல் 2 மணிக்கு ஐந்து கல்வி வலயங்களின் கல்விப் பணிப்பாளர்களையும் ஒன்றுகூட்டி நடமாடும் சேவையின் முன்னொழுங்குகள் மற்றும் ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

எட்டாம் திகதியிலிருந்து வலயத்துக்கு ஒரு நாள் என்ற வகையில் ஐந்து வாகனங்களிலும் நடமாடும் சேவை நடைபெறும்.

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் 2 ஆவது உயர்மட்டக்குழு 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறது. கல்வி அமைச்சர் தலைமையில் வரும் உயர்மட்டக்குழுவில் பத்துக்கும் மேற்பட்ட துறைசார் அதிகாரிகள் இடம்பெறுகின்றனர்.

கல்வி அமைச்சின் பொது நிலை நடமாடும் சேவை 14 ஆம் திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். வடக்கின் வசந்தம் வேலைத்திட்டம் தெடர்பான ஞாபகார்த்த கட்டடத்துக்கான அடிக்கல்லை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி நடுவார். வடக்கு மாகாண பாடசாலை மாணவர் , ஆசிரியர், அதிபர்களுக்கு சாதனையாளர் என்ற வகையில் நினைவுப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர்.

சாதனையாளர் கௌரவிப்பில் விளையாட்டுத்துறை, தமிழ்த்தினம், கணனிக் கற்கை, பொதுத்துறை,நிர்வாகம் என்ற வகையில் சாதனையாளர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

இதையடுத்து நடமாடும் சேவை துறைசார் நிலையில் நடைபெறும்.இதில் கலந்து கொள்பவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் காணப்படும்.

நடமாடும் சேவைகளில் முன்வைக்கப்படவேண்டிய தீர்வுகளை ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் மேற்கொள்வதற்கான முறைகள் தொடர்பாக வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு சுற்றறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

15 ஆம் திகதியில் இருந்து 2 ஆம் கட்டமாக நடமாடும் சேவை வலயக் கல்வி அலுவலக ரீதியாக நடைபெறவுள்ளது. இதில் வடக்கு மாகாண வலயக் கல்வித் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சு உயர் அதிகாரிகள் கலந்து கொள்வார்கள்.

இதில் துறைசார் நிலையில் கல்வி வலய ரீதியாக மதிப்பீடுகள் மேற்கொள்வதுடன் வலய ரீதியாக மேற்கொள்ளப்பட்ட கல்வி அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் தர உள்ளீடு, நிதி உள்ளிட்ட துறைசார் மதிப்பீடுகள், ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

'யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் தொடர் நடமாடும் சேவையை உரிய முறையில் ஆசிரியர்கள், அதிபர்கள், நலன்விரும்பிகள், கல்வி ஆர்வலர்கள் பயன்படுத்தி தங்களது பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதுடன் யாழ்.மாவட்டத்தின் கல்வி மேம்பாட்டுக்கான முன்னெடுப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வடக்குமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவுறுத்தியுள்ளார். (1-11)

# முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வுக்கு பிரிட்டிஷ் அரசு 1கோடி70 லட்சம் ரூபா உதவி

கொழும்பு, செப்.5

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் போராளிகளின் புனர்வாழ்வு மற்றும் சமூக ஒன்றிணைப்பு நடவடிக்கைகளுக்கு பிரிட்டன் ஒருகோடி 70 லட்சம் ரூபாவை வழங்க முன்வந்துள்ளது. இது தொடர்பான உடன்படிக்கையில் நேற்று வெள்ளிக்கிழமை இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் பிட்டர் ஹெய்சும் இடம்பெயர்விற்கான சர்வதேச அமைப்பின் (IOM) தலைவர் முகமது அப்டிகெரும் கைச்சாத்திட்டனர்.

நீதியமைச்சர் மிலிந்த மொரகொடவின் முன்னிலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பிரிட்டிஷ் தூதுவர், முன்னாள் போராளிகளின் தொடர்ச்சியான புனர்வாழ்வு, நாட்டின் நல்லிணக்கம் மற்றும் சமாதான நடவடிக்கைகளுக்கு முக்கியமானது - என்றார். (சி)

# சுதேச வைத்திய அமைச்சுச் செயலர் இன்று கைதடிக்கு விஜயம் மேற்கொள்கிறார்

யாழ்ப்பாணம், செப்.5

இலங்கைச் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் அசோகா பீரிஸ்,ஆயுள்வேத ஆணையாளர் றமணி குணவர்த்தன அம்மையார் மற்றும் தாவரவியலாளர் பியல் சமரசிங்க ஆகியோர் இன்று சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவத்துறை வளாகத்துக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

அங்கு தாவரவியலாளர் பியல் சமரசிங்க சித்த மருத்துவத்துறை மாணவர்களுக்கு மூலிகைகள் சம்பந்தமாக விரிவுரையொன்றை பி.ப. ஒரு மணிக்கு நிகழ்த்தவுள்ளார். அத்துடன் சித்த மருத்து வத்துறை மாணவர்களின் கண்காட்சியும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, யாழ். பல்கலைக்கழகத்தின் சுகநல நிலையத்தில் சித்த மருத்துவச் சிகிச்சைப் பிரிவை சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் அசோகா பீரிஸ் இன்று காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார்.

மருத்துவ பன்மைத்துவத்தின் பண்பாட்டின் தொடக்கமாக இந்தப்பிரிவு ஆரம்பிக்கப்படுகிறது என்று துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்தார். (1-7-160-51)

# ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்க்கக்கோரி வெள்ளை மாளிகை முன் விரைவில் பேரணி

நியுயோர்க், செப்.5

இலங்கைத் தமிழர் பிரச்சினையை அமெரிக்கா தீர்த்து வைக்கவேண்டும் என்று வலியுறுத்தி வெள்ளை மாளிகை முன்பாக விரைவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று இடம்பெற உள்ளது என்று அங்கிருந்து இங்கு தகவல்கள் வெளியாகி உள்ளன.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக அமெரிக்காவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிக்காக்கோ நகர கல்லூரி மாணவர்களான ஈழத் தமிழ் இளைஞர்கள் மூவர் சிக்காக்கா நகரத்திலிருந்து வாஷிங்ரன் வரை நீண்ட தூர நடைப் பயணப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே. அவர்கள் இன்னும் இரு வாரங்களில் வாஷிங்ரன் நகரை நடந்து, சென்றடைவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அவர்கள் மூவரும் வோஷிங்டன் நகரை சென்றடைவதை அடுத்து வெள்ளை மாளிகை முன்பாக ஆர்ப்பாட்டப் பேரணி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. இளைஞர்கள் மூவரும் 'மௌனத்தைக்கலைப்போம்' (Break the Silence) என்ற மகுடத்திலான நீண்ட தூர நடைப் பயணப் போராட்டத்தைக் கடந்த மே 26 ஆம் திகதி ஆரம்பித்தனர். அவர்களின் நீண்டதூர நடைப் பயணம் இன்னும் இரு வாரங்களில் நிறைவு பெறும் . அவர்கள் தினமும் 25 மைல்கள் தூரம் நடக்கின்றார்கள் என்றும் தினமும் 8 முதல் 10 மணித்தியாலங்கள் வரை தூங்கிக் கொண்டு மிகுதி நேரம் முழுவதும் நடையைத் தொடர்கிறார்கள் என்றும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்கள் வீதியோரங்களிலேயே படுத்துத் தூங்குகின்றனர் என்றும் தங்களை சுத்தப்படுத்திக் கொள்வதற்காக மாத்திரம் சுமார் மூன்று நாட்களுக்கு ஒரு தடவை ஹோட்டல்களுக்குச் செல்வார்கள் என்றும் தெரியவருகிறது.

கண்ணன் ஸ்ரீகாந்தா, விஜய் சிவனேஸ்வரன், ரமணன் திருக்கேதீஸ்வரன் ஆகிய மூவருமே இவ்வாறு நீண்ட நடைப் பயணப் போராட்டத்தை மேற்கொள்கிறார்கள் என்றும் இவர்களின் பெற்றோர் இலங்கையில் இருப்பதால் பாதுகாப்புக் கருதி ஏனைய விவரங்களை வெளியிட மறுக்கின்றார்கள் என்றும் மேலும் தெரியவருகிறது. இலங்கையில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகளைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது என்பதாலேயே தாங்கள் இப்போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் என்று விஜய் சிவனேஸ்வரன் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். (சி)

# பாதுகாப்பு அனுமதி பெற அடையாள அட்டையை சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.5

வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டுள்ள நன்னடத்தை உத்தியோகத்தர்கள், கலாசார உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் திருகோணமலைக்குச் செல்ல செயலகத்தால் பயண ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன.

இவ்வாறு செல்ல உள்ளவர்களுக்கு பாதுகாப்பு அனுமதியைப் பெறுவதற்கு வசதியாக அவர்களுடைய அடையாள அட்டை இலக்கத்தை இன்று முற்பகல் 10 மணிக்கு முன்னர் அரச அதிபர் அலுவலகத்தில் வழங்குமாறு பிராந்திய ஆணையாளர் கேட்டுள்ளார். (1)

# திஸநாயகத்துக்கு சிறைத் தீர்ப்பு; ஐரோப்பிய ஒன்றியமும் கண்டனம்

கொழும்பு, செப்.05

இலங்கையில் பத்திரிகையாளர் ஜே.எஸ். திஸநாயகத்துக்கு20 வருட சிறைத்தண்டனை வழங்கியமைக்கு ஐரோப்பிய ஒன்றியமும் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

கொழும்பு உயர்நீதிமன்றம் ஜே.எஸ். திஸநாயகத்துக்கு 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கியுள்ளமை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளது என ஐரோப்பிய ஒன்றியத்துக்குத் தற்போது தலைமை வகிக்கும் சுவீடன்,அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

திஸநாயகத்துக்கு வழங்கப்பட்ட தீர்ப்பும், அளவுக்கு அதிகமான தண்டனையும் இலங்கையில் பத்திரிகைச் சுதந்திரம் மற்றும் கருத்துச் சுதந்திரம் மதிக்கப்படுதல் பற்றிய கரிசனையை உண்டுபண்ணியுள்ளது என சுவீடன் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கருத்துச் சுதந்திரம் தொடர்பாகக் காணப்படும் குறைபாடுகள் பற்றி ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் கவலை கொண்டுள்ளது என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# இலங்கைக்கு ஜி.எஸ்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமீப காலங்களில் இலங்கை அரசு யுத்தத்தில் வென்றுள்ள அதேவேளை, தனது சகாக்கள் பலரின் நட்பையும் இழந்துள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள 'த எக்னமிஸ்ட்' மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையைப் போன்று தனது கௌரவத்தை இவ்வளவு வேகமாக மாசுபடுத்திக் கொண்ட நாடு இருக்கமுடியாது.

சமீப மாதங்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு யுத்தமொன்றை வென்றுள்ளது. அதேவேளை தனது பல சகாக்களின் நட்பை - நேசத்தை இழந்துள்ளது.

யுத்த காலத்திலும் ஏனைய சூழ்நிலைகளிலும் மஹிந்த அரசு மேற்கொண்டதாகக் கூறப்படும் துஷ்பிரயோகங்கள் பயங்கரமான பட்டியலாக உள்ளன.

**ஷெல் வீச்சில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் பலி**

ஆயிரக்கணக்கான தமிழ் பொதுமக்கள் மோதலின் இறுதிக் காலத்தில் ஷெல் வீச்சில் பலியாகியுள்ளனர். பெரும் எண்ணிக்கையிலான தமிழர்கள் காணாமற்போயுள்ளனர். யுத்தத்தால் இடம்பெயர்ந்த மூன்று லட்சம் தமிழர்கள் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுகின்றமையும், அச்சுறுத்தப்படுகின்றமையும் தொடர்கின்றது.

இராணுவத்தின் தந்திரோபாயங்களை விமர்சித்தமைக்காக ஜே.எஸ்.திஸநாயகத்திற்கு 20 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒரு காலத்தில் நிதியுதவிக்காக எதிர்பார்த்து நின்ற மேற்குலக நாடுகளால் இதனைத் தடுப்பதற்கு எதுவும் செய்யமுடியாதுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ இந்த நாடுகளுக்கு மாற்றீடாக சீனா, [illegible] போன்ற புதிய நண்பர்களை கண்டுபிடித்துள்ளார். இவர்கள் சமீபத்தில் இலங்கையில் யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணை செய்வதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் முயற்சியைத் தோற்கடித்தனர்.

என்றாலும், ஐரோப்பிய நாடுகளுக்கு மஹிந்த ராஜபக்ஷ விடயத்தில் இன்னமும் ஒரு பிடியுள்ளது. ஜி.எஸ்.பி. பிளஸ் எனப்படும் வரிச் சலுகையே அதுவாகும்.

இலங்கை பெருமளவு வெளிநாட்டு செலாவணியைப் பெறுவதற்கு காரணமாகவுள்ள இந்த வர்த்தகச் சலுகை குறித்து ஐரோப்பிய ஒன்றியம் ஆராய்ந்து வருகின்றது.

**இறுதி முடிவு ஒக்ரோபரில்**

இலங்கை இந்த வரிச் சலுகைக்கு அவசியமான விடயங்களை எவ்வாறு பின்பற்றுகின்றது என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றிய அறிக்கையை அடிப்படையாக வைத்து பார்க்கும்போது, இம் முறை வர்த்தகச் சலுகை கிடைக்காது என்ற மதிப்பீட்டிற்கு வரலாம்.

'த எகனமிஸ்ட்'டிற்கு கிடைத்துள்ள 130 பக்க இரகசிய அறிக்கையில், இலங்கை மனித உரிமை குறித்த தனது வாக்குறுதிகளை பின்பற்றவில்லை. இதனால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகைக்கு அது தகுதியற்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரந்துபட்ட பொலிஸ் சித்திரவதை, பத்திரிகையாளர்கள் கடத்தப்படுதல், அரசியல் மயப்படுத்தப்பட்ட நீதிமன்றங்கள், காணாமற்போனோர் குறித்து விசாரணைகளை எதுவும் இடம்பெறாதமை உட்பட அனைத்தும் இணைந்து இலங்கையில் முற்றுமுழுதாக நீதியின் பிடியிலிருந்து விதிவிலக்களிக்கப்படும் கலாசாரத்தை உண்டுபண்ணியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி.எஸ்.பி. குறித்த இறுதி முடிவு ஒக்ரோபர் மாதம் வரை வெளியாகாது.

இந்த அறிக்கையை எழுதியவர்களை இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்க மறுத்த அரசு இந்த ஆய்வை கடுமையாக கண்டித்துள்ளது.

இது மஹிந்த ராஜபக்ஷவை கவலையடையச் செய்யாது. மேற்குலகை எதிர்ப்பதே அவரது கவர்ச்சிகர குணாதிசயமாகவுள்ளது. அவரது சிறிய நட்பு நாடுகள் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 26 கோடி அமெரிக்க டொலர்களைப் பெற்றுக் கொடுத்தன. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக்கொலை: மாளிகாவத்தையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

மாளிகாவத்தையில் ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்னால் நேற்று நண்பகல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மூன்று முஸ்லிம் இளைஞர்கள் பொலிஸரால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நேற்று பகல் ஜும்மா தொழுகையை முடித்த பலநூற்றுக்கணக்கான முஸ்லிம் மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவர்கள் பாதாள உலகக்குழுவினர் என பொலிஸார் தெரிவித்திருந்தனர். ஆனால் சுட்டுக் கொல்லப்பட்ட அனைவரும் அப்பகுதியிலுள்ள அப்பாவி இளைஞர்கள் என ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

முஸ்லிம் இடதுசாரி முன்னணியால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் இடதுசாரி முன்னணியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்னவும் கலந்து கொண்டார். (சி)

## போர்க்குற்றம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துத் தெரிவிக்கையிலேயே தமது ஏமாற்றத்தை வெளியிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

'இலங்கையில் மோதலின் இறுதிக் காலப் பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை செய்வதற்கான சுயாதீன அமைப்பொன்றை உருவாக்கவிருப்பதாக அந்த நாட்டு அரசு எமக்கு உறுதியளித்திருந்தது.

இன்னமும் அரசு அந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. எதுவுமே நடை பெறாவிட்டால் நாங்கள் எதனையாவது செய்யவேண்டியிருக்கும்; செய்ய வேண்டும்.

இவ்வாறான விசாரணையொன்றை ஆரம்பிப்பதற்கு அரசுக்குப் பல வருடங்கள் தேவையில்லை. சில வாரங்களே போதும் - என்றார் அவர்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலக்கண்ணிவெடிகள் அகற்றும் பொருட்டு இந்த இயந்திரங்கள் அரச செலவில் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டன என அனர்த்த நிவாரண சேவைகள் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு தெரிவித்தது.

இந்த இயந்திரங்கள் 25 கோடி ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டன என தெரிவிக்கப் படுகிறது. விசேட விமானம் மூலம் இவை சிலோவாக்கியாவிலிருந்து கொண்டு வரப்பட்டன.

மேலும் 5 இயந்திரங்கள் இலங்கைக்குக் கொண்டு வரப்படவுள்ளன என அனர்த்த நிவாரண மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் றிசாட் பதியுதீன் தெரிவித்தார்.

தற்போது கொண்டுவரப்பட்ட இயந் திரங்கள் மன்னார் மாவட்டத்திலுள்ள நிலக்கண்ணிவெடிகளை அகற்றப் பயன் படுத்தப்படவுள்ளன என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## விடுதலைப் புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பில் செயற்திட்டம் ஒன்றை மேற் கொள்வதற்காக ஜப்பானிய தூதுக்குழுவினர் அனுமதிக்கப்பட்டிருந்தார்கள்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் போர் தீவிரமாக இடம்பெற்றுக்கொண்டிருந்த காலப் பகுதியில் ஜப்பானிய ஆதரவுடன் அமைக்கப்பட்ட இந்த சுரங்கப்பாதை சிறிலங்காவின் 58 ஆவது படை அணியினரால் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் கொழும்பில் இருந்து வெளிவரும் 'ஐலன்ட்' நாளேடு தெரிவித்துள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட சுரங்கப் பாதை 360 அடி நீளமானதாகவும், 25 அடி அகலமானதாகவும் இருந்தது. இதன் முன்பகுதி 300 அடி நீளமானதாகவும் 30 அடி அகலமானதாகவும் காணப்பட்டதுடன், இதனை அமைக்கும் பணியில் ஜப்பானியர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள் என்பது அண்மையில்தான் கண்டறியப்பட்டதாகவும் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

''விடுதலைப் புலிகளின் தலைமையை சிறிலங்காப் படையினர் முழுமையாக அழிப்பதற்கு மூன்று வார காலத்துக்கு முன்னர் இரட்டைவாய்க்கால் பகுதியில் இந்தச் சுரங்கப் பாதையைக் கைப்பற்றினார்கள். இந்தப் பகுதியில் இருந்து கடலுக்குத் மறைந்து செல்வதற்கு இந்தப் பாதையைப் பயன்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருந்தார்கள். அதே போல கடற்பகுதியில் இருந்தும் இந்தப் பகுதிக்கு மறைந்துவர முடியும்.

ஆழிப்பேரலை தாக்கிய பின்னர் அப்போதைய ஐக்கிய தேசிய முன்னணி அரசு பல நாடுகளைச் சேர்ந்த நிபுணர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக செல்வதற்கு அனுமதி வழங்கியிருந்தது.

அந்தக் காலத்திலேயே நீர்மூழ்கிக் கப்பல்களைச் செய்வதற்கு ஜப்பானியர்கள் தமக்கு உதவியதாக கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். இருந்தபோதிலும் இதன் முதலாவது பரீட்சார்த்த முயற்சி தோல்வியடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

வெள்ளமுள்ளிவாய்க்கால் பகுதியில் தரித்து நிற்கும் துருக்கியக் கப்பலான 'ஃபரா 3' க்கு அண்மையில் புலிகளின் இந்த நீர்மூழ்கிக் கப்பலை சுழியோடிகள் பின்னர் கண்டுபிடித்தார்கள்.

இந்தப் பணிக்குத் தேவையாக இருந்த பல்வேறு பொருள்களையும் விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் இருந்து கடத்திக்கொண்டு வந்தார்கள்.

விடுதலைப் புலிகளிடம் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட மிகவும் சக்திவாய்ந்த வெளி இணைப்பு இயந்திரங்கள், தொலைத்தொடர்பு சாதனங்கள் உட்பட பல பொருள்கள் இருந்தன. வன்னி கிழக்குப் பகுதியில் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது இவை கைப்பற்றப்பட்டன. ஜப்பானில் வசித்துவந்த ஈழத் தமிழர் ஒருவரும் இந்த நிபுணர்களுடன் இணைந்து பணி புரிந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மீண்டும் போர் தொடங்குவதற்கு முன்னதாகவே அவர் அங்கிருந்து வெளி யேறிவிட்டார் - என்றுஉள்ளது. (அ)

## வடக்கில் இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவித்தல் வரை ஒத்திவைக்கப்பட் டுள்ளன.

கிளிநொச்சி, ஆனையிறவு, முல்லைத்தீவு மற்றும் புதுமாத்தளன் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களின்போது உயிரிழந்த படையினரின் நினைவாக அங்கு நினைவுத் தூபிகள் கட்டப்பட்டுள்ளன.

இந்த நினைவுத் தூபிகள் இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவால் நேற்றுத் திறந்துவைக்கப்படவிருந்தன.

சரத் பொன்சேகா வட பகுதிக்கு நேரில் சென்று தூபிகளை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்க இருந்தார். இதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் உத்தரவின் பேரில் இத்திறப்பு விழாக்கள் கடைசி நேரத்தில் மறுதிகதி அறிவிக்கப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஆனால், ஒத்திவைப்புக்கான காரணம் இன்னமும் வெளியிடப் படவில்லை.

பகிரங்க பிரசாரம் கிடைக்கக்கூடிய எந்த நிகழ்ச்சிகளிலும் பாதுகாப்புத் தரப்பு அதிகாரிகளைப் முக்கியப்படுத்தவேண்டாம் என்று கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என்றும் இதனடிப்படையிலேயே இந்த நிகழ்வு ரத்துச் செய்யப்பட்டுள்ளது என்றும் இராணுவ வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (சி)

## அகதிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இப்படிக் கூறினார். அவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதிமுகாம்களில் இருந்து சுமார் 10 ஆயிரம் அகதிகள் காணாமல் போயுள்ளனர் என்று வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார். இந்தத் தகவல் ஜூன் மாதத்திலும் வெளியாகியிருந்தது.

சிறைக்கைதிகள் போல் முட்கம்பிகள் சூழ தமிழ் அகதிகள் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்கள் எப்படிக் காணாமல் போனார்கள்? அந்தப் 10 ஆயிரம் பேரும் கடத்தப்பட்டனரா? அவர்கள் இப்போது எங்கே உள்ளனர்? இந்தக் கேள்விகளுக்கு அரசு பொறுப்புடன் பதிலளிக்க வேண்டும்.

இன்று அகதிகள் படும் வேதனையை வார்த்தையில் விவரிக்க முடியாது. போதிய உணவின்றி, உடையின்றி, குடிதண்ணீரின்றி, மலசலகூட வசதிகளின்றி இந்த மக்கள் அகதிமுகாம்களில் கஷ்டப்படுகின்றனர்.

இந்தக் கஷ்டங்கள் போதாதென்று மழையிலும் அவர்களைக் கொடுமைப்படுத்துகின்றது அரசு. பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பமாகப் போகின்றது. அப்போது அந்த முகாம்களில் தண்ணீர் நிரம்பி வழியும். அவர்களால் எதுவும் செய்ய முடியாமல் போகும்.

அண்மையில் ஓரிருநாள் பெய்த மழைக்கே அந்த முகாம்கள் நீரினால் நிரம்பி வழிந்தன. இந்த நிலையில் இந்த மக்கள் உடனடியாக மீள்குடியமர்த்தப்பட வேண்டும். இது தொடர்பாக சர்வதேசமே வேண்டுகோள் விடுத்து வருகின்றது. அரசு அதைக் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

இந்த மக்கள் உடனடியாக மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என்று நாம் மீண்டும் மீண்டும் அரசிடம் கேட்டுக்கொள்கிறோம். - என்றார். (அ-சி)

## சட்டத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் - முக்கியத்துவம் - குறித்தும் இருவரும் பேசினர் என்றும் -

மிக அண்மையில் இலங்கை இராணுவத்தினர் தமிழ்ப்போராளிகளை சட்டத் துக்கு முரணாக படுகொலை செய்ததாக வெளியான 'சனல் - 4' வீடியோ மூலம் எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசு வகைகூறவேண்டும் என்பது குறித்து சந்திப்பின் போது ஐ.நா.செயலாளர் நாயகத்தினால் காத்திரமாக எடுத்துரைக்கப் பட்டது. என்றும் -

இருவருக்கும் இடையிலான சந்திப் பின் பின்னர் இங்கு வெளியிடப்பட்ட சாராம்சமான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் உலக கால நிலை மாநாட்டின் போது இலங்கையின் அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவை சந்தித்தவேளை பான் - கீ - மூன் சனல் 4 வீடியோ குறித்துக் கேள்வி எழுப்பினார் என ஐ.நா.தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் உருவாகியுள்ள அகதிகளின் நெருக்கடிகள் குறித்து பான் - கீ - மூன் அமைச்சர் சமரசிங்கவுடன் கலந்துரையாடினார் என்றும் ஐ.நா. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

'சனல் - 4' தொலைக்காட்சி ஒளிபரப்புச் செய்த வீடியோ குறித்து பான் - கீ - மூன், சமரசிங்கவிடம் கேள்வியெழுப்பியமையை ஐ.நா. அதிகாரிகள் உறுதிசெய்துள்ளனர் என நியுயோர்க்கில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

எனினும்,மஹிந்த சமரசிங்க இதற்கு என்ன பதில் அளித்தார் என அதிகாரிகள் குறிப்பிடவில்லை.

குறிப்பிட்ட வீடியோ பற்றி அமெரிக்கா ஆழ்ந்த கவலை வெளியிட்ட மறுநாள், பான் - கீ - மூன் இதுகுறித்து மஹிந்த சமர சிங்கவிடம் கேள்வியெழுப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பான் - கீ - மூனும், மஹிந்த சமரசிங்கவும் முகாம்களின் நிலைமை, தேசிய நல்லிணக்கம் மற்றும் பதிலளிக்கும் கடப்பாடு போன்றவற்றின் முக்கியத்துவம் பற்றி ஆராய்ந்துள்ள மையை ஐ.நாவின் பிரதிப் பேச்சாளர் மேரி ஒசாபேயும் உறுதிசெய்துள்ளார்.

இடம்பெயர்ந்தவர்கள் தமது பகுதிகளுக்கு மீளத் திரும்புதல், மக்களும் மனிதாபிமானப் பணியாளர்களும் சுதந்திரமாக நடமாடுதல் போன்றவை குறித்தும் ஆராயப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை, இடம்பெயர்ந்தோர் முகாம்களில் இன்னமும் 3 லட்சம் பேர் வரையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்துக் கவலையடைவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் ஜெனீவா தலைமையகத்தில் வைத்து செய்தியாளர்களைச் சந்தித்து உரையாற்றிய போதே பான் கீ மூன் இதனைத் தெரிவித்துள்ளார்.

முகாம் நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்படாத நிலையில், எதிர்வரும் பருவப் பெயர்ச்சி மழை காலத்தில் முகம் கொடுக்க வேண்டிய சவால்கள் பற்றித் தாம் அச்சமடைவதாகவும் ஐ.நா. செயலாளர் குறிப்பிட்டார்.

தமிழ்க் குடும்பங்கள் விரைவில் விடுவிக்கப்பட்டு, பிளவுபட்ட குடும்பங்கள் ஒன்றிணைக்கப்பட்டு சுதந்திரமாக வாழ்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என பான் கீ மூன் தெரிவித்தார் . (அ)


mp3, mp4 பிளேயர்கள்
Memory Cards (மெமரி காட்கள்)
Pen Drives (பென் ட்றைவ்கள்)
Card Readers (காட் றீடர்கள்)
அஸ்வினி மலரி பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு
அழையுங்கள் : 021 567 7777

ENGLISH
SPOKEN WITH GRAMMAR
By: Britto
புதிய பிரிவு ஆரம்பம்
09.09.2009 புதன்/வெள்ளி
காலை 7 மணி வகுப்புகள்
கொக்குவில் (ஞானபண்டித வித்தியாசாலை அருகில்)

PERSONAL CLASS
364,Stanly Rd.Jaffna (Near DMI)
GAQ/BA 1/ BA.Final
தமிழ் -
K.தர்மராஜா
வகுப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன
GAQ-(I)Paper -8-9am
பேச,எழுத,வாசிக்க
Spoken Sinhala
By.k.கார்த்திகேசு
Sat/Sun 12-1
ஆரம்பம் -இன்று 05.09.2009
English GAQ/BA.1-Paper

தேசிய சேமிப்பு வங்கி போட்டிப் பரீட்சை வகுப்புகள்
சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய், 2 மணி தொடக்கம் 5 மணி வரை நடைபெறும். வழிகாட்டி நூல் கிடைக்கும்
யாழ்ப்பாணம் பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக.

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கல்வி வரலாற்றில் 33 வருட அனுபவம் வாய்ந்த சேவை
3 ஆம் தவணைக்கான வகுப்புகள்
தரம் 6, 7, 8, 9, 10, O/L Evening Batch
புதிய அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.
ஆரம்பம்: 07.09.2009 3.30 மணி
* O/L இற்கான Paper Class ஆரம்பமாகிவிட்டன.
* அனுபவமும், திறமையும் வாய்ந்த ஆசிரியர் குழாமின் ஒன்றிணைந்த சேவை.

பாடசாலை உபகரணங்கள்
அழகுசாதனப் பொருட்கள்
இலத்திரனியல் உபகரணங்கள்
வீட்டு உபகரணங்கள்
அஸ்வினி மலரி பிளாசா
72, பலாலி வீதி, கோண்டாவில் கிழக்கு
அழையுங்கள் : 021 567 7777

ENGLISH SPOKEN & GRAMMAR
BY - MR.BRITTO
ஆரம்பம் - 06.09.2009 (1.00PM)
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

LAVA HOSPITAL
75, கோயில் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 4333
ஸ்கான் (Scan), ECG கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வு கூட வசதிகள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
Basic Body Checkup
'அடிப்படை உடற் பரிசோதனைகள்
★ உடல் பருமனானவர்களைப் பரிசோதிப்பதற்கான
Obesity package - 1200/=

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE, JAFFNA.
சிங்களம் (பேச்சு, எழுத்து)
அரச உத்தியோகத்தர்கள் மாணவர்களுக்கானது
ஆரம்பம்: 05.09.2009 (Sat)
Sat, Sun - 4.30 - 6.00 (I)
Sat, Sun - 6.00 - 7.30 (II)
By:- V.T.சபேஸ்

பட்டப்படிப்புகள் கல்லூரி
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
பேராதனைப் பல்கலைக்கழக B.A. இறுதியாண்டு புதிய மாணவர்களுக்கான தமிழ்ப்பாட விரிவுரைகள் 06.09.2009 ஞாயிறு காலை 8 மணிக்கு ஆரம்பம்
தமிழ் விரிவுரையாளர்: ம.பா.மகாலிங்கசிவம்
பரீட்சைக்குரிய அகநானூறு, புற நானூறு செய்யுட் பகுதிகள் நீங்களே பொருள் எழுதும் வகையில் மிக எளிமையாகக் கற்பிக்கப்படும்.
யாழ்.பல்கலைக்கழக Part II வகுப்புகளும் நடைபெறுகின்றன.
பேராதனை G.A.Q பரீட்சையில் தமிழ்ப்பாடத்தில் 100% சித்திபெற்றுத் தந்த மாணவர்களை வாழ்த்துகிறோம்!
இயக்குநர்
பட்டப்படிப்புகள் கல்லூரி, யாழ்ப்பாணம்.

NORTH LANKA IIT
0217390110
0602214305
4ம், 5ம் திகதி NORTH LANKA IIT யாழ் நிறுவனத்திலும்
6ம் திகதி யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்திலும்
B.Sc. in Multimedia Computer Science கற்கைநெறிகளுக்கு
Spot Admission
யாழ் வந்துள்ள Nottingham College of London Director இனால்
நேரடி அனுமதிகள் வழங்கப்படுகின்றன!


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.09.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org